# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

ஆகஸ்ட்-2015

பருவம் 1 புனல் 11



காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

ஆசிரியர்
சி. இராவணன் 97868 89325

உரிமை & வெளியீடு
சி.விஜயராகவன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

# காட்டாறு

## டிஜிட்டல் பாய்ச்சல்

காட்டாறு... அறிவியல் பண்பாட்டை விளக்கும் ஏடாக - பெரியாரியலுக்கு மேலும் ஒரு ஆயுதமாக - அனைத்துத் தடைகளையும் தகர்த்து - எவ்விதச் சமரசமுன்றிப் பாய்ந்து வருகிறது.

கடந்த 2014 அக்டோபரிலிருந்து 11 வது இதழாக ஆகஸ்ட் இதழ் வெளியாகியுள்ளது. தடையின்றிப் பாய ஆண்டுச்சந்தாக்கள் அவசியம் எனக் கருதி, ஏப்ரல் 14 முதல் மே 14 முடிய 1000 ஆண்டுச்சந்தாக்களைச் சேகரிப்பது என முடிவு செய்து ஒரே மாதத்தில் 1120 சந்தாக்களைத் திரட்டினோம். கடந்த மே 17 அன்று பொள்ளாச்சி அருகே கிணத்துக்கடவில் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமையில் சந்தா வழங்கும் விழாவை நடத்தினோம்.

இதோ அடுத்தகட்டமாக டிஜிட்டல் பாய்ச்சல். ஆண்ட்ராய்ட், சாம்சங் ஆப்ஸ் ஸ்டோர், ஆப்பிள், விண்டோஸ், கூகுள்ப்ளே போன்றவற்றில் இயங்கும் வகையில் புதிய செயலி *Apps* ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. 'செல்போன்'கள், 'டேப்'கள் போன்ற அனைத்து டிஜிட்டல் சாதனங்களிலும் அனைத்து இயங்குதளங்களிலும் இந்த செயலி *Apps* கிடைக்கும்.

கூகுள்ப்ளே, சாம்சங் ஆப்ஸ் ஸ்டோர், ஆண்ட்ராய்ட்டில் செயல்படும் அனைத்து போன்களிலும், டேப்களிலும் Kaattaaru எனத் தேடினால் இந்த இலவசச் செயலி கிடைக்கும். ஆப்பிள் ஐஃபோன், ஐபேட் களில் ஆப் ஸ்டோரில் apple itunes / appstore / kaattaaru காட்டாறு எனத்தேடி இலவசமாக காட்டாறு Apps செயலியைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதன் பிறகு அதிலேயே சந்தா செலுத்தியோ, தனி ஒரு இதழை ரூ 20 செலுத்தியோ பதிவிறக்கம் செய்து படிக்கலாம்.

மேலும் www.suyamariyathai.org என்ற இணையதளத்தில் காட்டாற்றின் கட்டுரைகளை யூனிகோடிலும் இலவசமாகப் படிக்கும் வசதியும் உள்ளது. அடுத்த தலைமுறையினர் காட்டாற்றை எளிதாக அணுகும் வகையில் இணையதளத்தில் இலவசமாக யூனிகோடாகவும், ஆப்பிள், விண்டோஸ், ஆன்ட்ராய்ட் இயங்குதளங்கள், அச்சிட்ட இதழ் என அனைத்து வகையான ஊடகங்களிலும் பெரியாரியலைக் கொண்டு செல்லும் பயணம் தொடர்கிறது.

திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு நாளேடான விடுதலை, கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ல் தோழர் பெரியார் பிறந்த நாளில் ஆப்பிள் கருவிகளில் நுழைந்தது. அதன்பிறகு ஆப்பிள், ஆண்ட்ராய்ட், விண்டோஸ் என அனைத்து டிஜிட்டல் கருவிகளிலும் கிடைக்கும் திராவிடர் இயக்க ஏடு காட்டாறு தான் என்று அறிவிப்பதில் பெருமை கொள்கிறோம்.

காட்டாற்றின் டிஜிட்டல் மயத்திற்காக கடும் உழைப்பைக் கொடுத்த எங்கள் தொகுப்புக்குழுவின் தோழர் யாழ்மொழிக்கு பெரியாரியலை வாழ்வியலாகக் கொண்டு வாழும் எண்ணற்ற தோழர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காட்டாறு மட்டுமல்ல இன்னும் ஏராளமான திராவிடர் இயக்க ஏடுகள் உருவாக வேண்டும். மாவட்டத்துக்கு ஒரு சிற்றிதழாவது வெளிவரவேண்டும். திராவிடர் இயக்கங்களின் தோழர்கள் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அவை அனைத்தும் இந்த டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ற வகையில் தம்மைத் தகவமைத்துக் கொள்ளவும் வேண்டும்.

# அறிவின் வழி - உரையாடல்



முனைவர் பூ.மணிமாறன்

உரையாடல் என்பது இன்று எங்கெங்கினும் நிறைந்து காணப்படுவது. உரையாடல் இன்றி இவ்வுலகம் இயங்கா நிலை உள்ளது. உரையாடல் ஒன்றே நம் அறிவை உய்விக்கும் ஆற்றல் கொண்டதாக உள்ளது. பல சமூகப் புரட்சியாளர்கள், கல்வியாளர்கள் அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள் ஆகியோர் தங்களது பேச்சின் மூலமாகவே பல்வேறு மாற்றங்களை சமூகத்தில் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். ஆனால் நமது தமிழகச் சூழலில் பேச்சு என்பது மட்டுமே நிலவிவந்துள்ளது. ஒருவர் பேசி பலர் கேட்பதும், அந்த ஒருவர் பேசும்போது அவர் பேசும் பேச்சினை எவ்வித கேள்விக்கு உட்படுத்தப்படாமலும் அப்படியே உள்ளது உள்ளபடியே ஏற்றுக்கொள்வதும், எதிராளியின் உள்ளக்குமுறலைக் கணக்கில் கொள்ளாமல் அந்த ஒருவர் தனது கருத்தை ஒற்றைக் குரலால் நிறுவுவதும், பிறருக்குத் தனது காதைக் சிறிதும் கொடுக்காமல் தனது வார்த்தைகளை மட்டுமே கேட்கச் செய்வதும் ‘பேச்சு’ எனப்படுகிறது.

இத்தகைய பேச்சுக்களை மட்டுமே நமது சமூகப் புரட்சியாளர்கள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள் ஆகப்பட்ட நண்பர்கள் நமக்கு அறிமுகம் செய்துள்ளனர். நாமும் அதற்க்கே பழக்கமாகி விட்டோம். இத்தகையக் கலாச்சாரம் ‘கைதட்டல்’ என்ற செயல் மூலமாகவும் இன்றுவரை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. மேடைகளும் மேடைப்பேச்சுகளும் இன்று வரை நம்மை சொல்லொண்ணா துன்பங் களுக்கு ஆளாக்கிக்கொண்டே உள்ளன. ஒருவர் பேசி ஆயிரம்பேர் கேட்டுக் கைதட்டும் கலாச்சாரம் இன்னும் நம்மை விட்டுப் போனபாடில்லை.

ஆனால் பேச்சையும் தனது உரையாடல் உத்தியாக மாற்றியவர் தோழர் பெரியார் ஆவார். தன் வாழ்நாளில் பெரியார் பேசிய பேச்சுக்களை ஒலிபரப்பினால் இரண்டு ஆண்டுகள் அய்ந்து மாதங்கள் பதினொரு நாட்கள் அதாவது 21400 மணி நேரம் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது ஒரு வியப்பான செய்தி. அக்காலத்தில் ஒலிப்பெருக்கி பயன்பாடு இல்லாத காலகட்டத்தில் ஜோடனையற்ற வார்த்தை ஜாலமற்ற பெரியாரின் பேச்சு மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளது.

இத்தகைய சோர்வுதட்டும் பேச்சி னையும் மக்கள் விரும்பும் வண்ணம் சிறந்த உரையாடலாகவும் மாற்றும் உத்தியினை பெரியார் இலாவகமாகத் தனது பேச்சில் கையாண்டுள்ளார். தனது பேச்சினைக்கேட்கும் மக்களையும் பேசச் செய்துள்ளார். தனது பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கும் போது மனதில் தோன்றும் சந்தேகங்களை, கேள்வி வாயிலாகத் தன்னிடம் கேட்கச் செய்துள்ளார். இப்படி மனதில் தோன்றும் அய்யங்களை கேள்விகளாக்கி பேசுபவரிடம் உரையாடலாக மாற்றியுள்ளார். இம்முறையானது சொற்பொழிவைச் செவி மடுக்கும் மக்கள் ஆர்வமுடன் பங்கேற்கும் நிகழ்வாக பெரியாரால் மாற்றப்பட்டுள்ளது. ஆக, இப்படியாகப் பேசுபவர், தான் சொல்லவந்த கருத்தை மிக எளிமையாகக் கேட்பவரிடம் செலுத்தமுடியும். அத்தகைய பெரியார் மக்கள் மனதில் அன்று ஏற்றிய கருத்துக்களை இன்று வரை திராவிட இயக்கங்கள் அறுவடை செய்வது தனிக்கதை.

‘அர்த்தமுள்ள மனிதப்பேச்சு உலகை மாற்றும்’ என்றார் பாவ்லோ பிரையர். அப்படிப் பல பேச்சுக்கள் உலகை மாற்றியும் உள்ளன. குறிப்பாக பெண்கள் பேசத் துவங்கியது இருபதாம் நூற்றாண்டில்தான். நமது தமிழ்ப்பெண்கள் சங்ககாலத்திலேயே நாற்பத்தி நாலு பெண்பாற்பால் புலவர்கள் இருந்துள்ளனர். இந்த இடத்தில் பேச்சு உரையாடல் ஆகியவை பற்றி பேசுமுன் இந்த சமூக அமைப்பில் மௌனம் என்பது குறித்தும் அதிலும் கள்ளமௌனம் குறித்தும் பேச வேண்டும்.

எழுதுதல், வாசித்தல், மறுவாசிப்புச் செய்தல், எழுதியதை மீண்டும் திருத்தி எழுதுதல் என்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளித்தவர் கல்வியியலாளர் பாவ்லோ பிரையரே. இன்றைக்கும் பலர் வகுப்பறையில் சிற்சில உரையாடல்கள் நிகழ்த்துவதையோ, நகைச்சுவையை அள்ளித் தெளிப்பதையோ, ஆரோக்கியமான உரையாடல் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம், பாவ்லோ பிரையரே சொன்ன வழி எனக் கூறிக்கொண்டும் இதே வழியான செயல்பாடுகளை அரங்கேற்றுகின்றனர். இவை இரண்டுமே பாவ்லோ பிரையரே முன்மொழியும் உரையாடல் வழிமுறை யல்ல. ஒரு குறிப்பிட்ட பொருளை அல்லது பிரச்சனையை எடுத்துக் கொண்டு, ஆரோக்கியமான கலந்துரையாடல் வழியாக இலக்கு மாறாமல் அடுத்த அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்வதே பிரையரே முன்வைக்கும் உரையாடல்.

சரி நாம் மௌனத்திற்கு வருவோம். மனித இருப்பு எப்போதும் மௌனமானதாகவே இருக்க முடியாது. உலகை, சமூகத்தை மாற்றி அமைக்காத பேச்சும் மௌனம் தான். சமூகத்தை மாற்றி அமைப்பது என்பது, சமூக அக்கறையுடன் பேசுவது என்பது ஒரு சில மனிதர்களின் தனிமனித உரிமையல்ல. அது ஒரு ஒட்டுமொத்தச் சமூக உரிமையாகும். ஒரு மனிதன் தான் ஒரு சொல்லைப் பேச விழைகிறான். அப்போது அந்த உரையாடல் சமூகத்தில் தடை செய்யப்படுகிறது. அத்தடை சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் தடை செய்யப்படுகிறது. இவ்வாறாகத் தனது சொல்லைத் தான் பேசும் உரிமையை இழந்தவனுக்கு பேச்சுரிமை அவசியமாகிறது. அவனது உரிமையை பறிப்பது மனித விரோதச் செயலாகும்.

ஆகவே அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மனித சமூகத்திற்குள் உரையாடல் சாத்தியமாய் இருப்பதில்லை. பெரும்பான்மையான மக்களை ஒடுக்குகிற, ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பிற்குள் உரையாடல் நிகழ்வதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுக்கு உரிய சொற்களைப் பேசும் உரிமை இருப்பதில்லை. சிறுபான்மை மக்களுக்கும் இது பொருந்தும். இவர்களின் மீது பண்பாட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் பெயரால் மௌனப்பண்பாடு (Cultural of Silence) போர்த்தப் படுகிறது. அது ஆதிக்கசக்திகளின் விருப்பம் போல நிறைவேற்றப் படுகிறது.

**மேடைகளும் மேடைப்பேச்சுகளும் இன்று வரை நம்மைச் சொல்லொண்ணா துன்பங்களுக்கு ஆளாக்கிக்கொண்டே உள்ளன. ஒருவர் பேசி ஆயிரம்பேர் கேட்டுக் கைதட்டும் கலாச்சாரம் இன்னும் நம்மை விட்டு போனபாடில்லை.**

**சாதீய ஒடுக்குமுறைகள், ஆதிக்க வெறிக்கொலைகள் ஆகியவை நடக்கும்போது கள்ளமௌனம் காத்தவர்கள் தான் தற்போது மதுவிலக்கில் மூழ்கி முத்தெடுக்கப் பார்க்கிறார்கள்.**

அதாவது ஒரு குறிப்பிட்ட சாதியின் மீது வன்முறை பாய்ச்சப்படுகிறது அல்லது ஒரு குறிப்பிட்ட சிறுபான்மையினர் மீது மதத்தின் பெயரால் வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது என்றால், மேற்கண்ட செயல்களால் பாதிக்கப் படுவோர் குறித்து சுதந்திரமான காத்திரமான விமர்சனப்பூர்வமான ஒரு உரையாடல் இச்சமூக அமைப்பில் சாத்தியமற்றுப் போய்விடுகிறது. இதனையே மௌனப்பண்பாடு என்கிறோம். இத்தகைய மௌனப்பண்பாடு முழுமையாக பயன்படாதபோது, ஆதிக்கவாதிகள் புனைவு களைக் (Mythicize) கட்டமைக்கின்றனர்.

இந்தப் புனைவுகள் (Mythicize) என்பது "இங்கு சமூகம் ஒழுங்காக இயங்குகிறது. அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்பு நல்கப்படுகிறது. மக்கள் அனைவரும் அமைதியாக சுபிட்சமாக நடமாடுகிறார்கள். இங்கு பிரிவினைகள், பாகுபாடுகள் இல்லை" என்று ஊடகங்கள் வாயிலாக கட்டமைக்கப் படுகிறது. இன்னும் நமக்கு புரியும் விதமான புனைவு ஒன்றினை நமது 'மகாத்மா' காந்தி கட்டமைத்தார். அதாவது "இந்தியாவில் உள்ள நான்கு வருணங்களும் நாட்டைக் காக்கும் நான்கு படைகள்" என்றார். இதுபோன்ற புனைவுகள் உருவாக்கப்பட்டு பள்ளி, குடும்பம், மதம் போன்ற நிறுவனங்கள் மூலமாக மக்கள் மனதில் பதிக்கப்படுகின்றன. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாவையும் அப்பிரச்சனைகளுக்குரிய உண்மையான காரண காரியங்களோடு தொகுத்தளிக்கப்படாமல் ஒடுக்குபவர்களுக்கு வசதியான ஒரு கோணத்தில் மட்டுமே குவிக்கப்பட்டு - ஒத்தை பார்வையோடு காட்டப்படும். இவற்றையே உண்மையென நம்பவைக்கப்படுகிறோம். இவ்வாறாகக் கட்டமைக் கப்பட்ட உலகிலேயே நாம் வாழ்கிறோம்.

மேலே நாம் பேசியவை - பேச்சு, உரையாடல், உரையாடலைச் செயல் இழக்கச் செய்யும் ஆதிக்கவாதிகளின் தந்திரமே மௌனக் கலாச்சாரம் என்பது. இதில் சில சாதீய ஒடுக்குமுறைகள், ஆதிக்கவெறிக்கொலைகள் ஆகியவை நடக்கும் போது கள்ளமௌனம் காத்தவர்கள் தான் தற்போது மதுவிலக்கில் மூழ்கி முத்தெடுக்கப் பார்க்கிறார்கள். எனவே உரையாடல் ஒன்றே அறிவிற்கு வழி. சிந்தனைக்கு வழி. ஏன்? எதற்கு? எப்படி? என வினா எழுப்புவோம். உரையாடல் வழி உண்மையான தீர்வுகளை நோக்கி நகர்வோம்.

“ஆசிரியர்கள் இம்மாதிரி மாநாடுகள் கூட்டிப் பேசுவதும், தீர்மானிப்பதும், தங்களுக்குச் சில சவுகரியத்தை உண்டாக்கிக் கொள்ளவும், தங்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொள்ளவுமே யல்லாமல் தங்களால் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவோ, தேச முன்னேற்றத்ததற்கு அனுகூலமான கல்வியைப் போதிக்கும் சக்திளை அடையவோ ஒரு பிரயத்தனமும் செய்ததாக நான் அறியவே இல்லை. ..ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி, சகலகலா கல்வி என்பது வரையிலும் கவனித்தால், தற்காலம் அடிமைத் தன்மையையும், சுயமரியாதையற்ற தன்மையையும் உண்டாக்கிக் கொடுமையான ஆட்சிமுறை கொண்ட ஒரு அரசாங்கத்திற்கு உதவிசெய்து வயிறு வளர்க்கும் தேசத் துரோகிகளை உற்பத்தி செய்யும் இயந்திரமாகத்தானே இருக்கிறதேயல்லாமல் வேறென்ன இருக்கிறது?”

*தோழர் பெரியார் - குடி அரசு 01.05.1927*

தோழர் பெரியார் காண விரும்பிய ஆசிரியராக விளக்குபவர்கள் மிகச்சிலரே. அப்படிப்பட்டவர்களில் முக்கியமானவர் நமது பேராசிரியர் இராமு.மணிவண்ணன் ஆவார்.



# பேராசிரியர் இராமு. மணிவண்ணன் அவர்களுக்குத் துணைநிற்போம்!

திபெத், பர்மா ஆகிய நாடுகளின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். டில்லிப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். தமது வருமானத்தைக் கொண்டு வேலூர் அருகே அடித்தட்டு மக்களுக்காக, உலகத்தரத்தில் ஒரு முன்மாதிரிப் பள்ளியை நடத்தி வருகிறார். சென்னைப் பல்கலைக்கழக அரசியல் அறிவியல் துறையின் தலைவராகப் பணியாற்றி வந்தார்.

பொதுவாக கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் ‘துறைத்தலைவர்’ என்ற பொறுப்புக்கு யார் வந்தாலும் அவர்களுக்கு உடனே கொம்பு முளைத்துவிடும். மாணவர்களும் பெரும்பாலும் துறைத் தலைவரைச் சந்திக்க அஞ்சுவார்கள் அல்லது விரும்ப மாட்டார்கள். இந்த யாதார்த்த சூழலை உடைத்த சிலரில் குறிப்பிடத்தக்கவர் நமது இராமு.மணி வண்ணன். அவர் தனது மாணவர்கள் பலருக்கு ஆசிரியராக, நண்பனாக, வழிகாட்டியாக வாழ்ந்து வருபவர்.

மாணவர்கள் தமது கல்லூரிக்காலங்கள் முடியும்வரை மட்டுமே துறைத்தலைவர்களைக் ‘கண்டு’ கொள்வார்கள். படிப்பு முடிந்தால் அவர் இருக்கும் திசைக்கே திரும்பமாட்டார்கள். ஆனால் படிக்கும் காலத்தில் மட்டுமல்லாமல் படிப்பை முடித்த பலருக்கும் இன்றும் உற்ற தோழனாய் விளங்குபவர் பேராசிரியர் இராமு.

மதுவிலக்குப் போராட்டத்தில் ஈடுபட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உடன்படாத காரணத்தால் பல்கலைக்கழக நிர்வாகம் அவரை அரசியல் துறைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கியுள்ளது. உலக அளவில் அறியப்பட்ட அரசியல் விஞ்ஞானியை, மியன்மா, நேபாளம், ஈழம், திபெத் மக்களின் போராட்டங்களில் அவர்களுடன் நின்று முக்கியப் பங்காற்றும் ஒருவர் சென்னைப் பல்கலக்கழகத்தில் பணியாற்றுவது பல்கலைக்கழகத்துக்கே பெருமை. அவரின் அருமையை உணராமல் அவமதிக்கும் சென்னைப் பல்கலைகழக நிர்வாகத்தை வன்மையாக கண்டிப்போம். பேராசிரியர் இராமு. மணிவண்ணன் அவர்களுக்குத் துணை நிற்போம்!

- தொகுப்புக்குழு

# பாலியல் கல்வி

பருவ வயதை அடைந்து விட்டாள் - வயசுக்கு வந்துட்டா என்றால் என்ன?


பாலியல் சுரப்பிகள் ஆண், பெண் இருவருக்கும் பிறப்பிலிருந்தே இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வயதில் அவை வளர்ச்சி அடைந்து, பிறகு வெவ்வேறு விதமாக அவை முழு வளர்ச்சி அடைகிறது. ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாக அதற்குண்டான வேலையைத் துவங்குகின்றன. பாலியல் சுரப்பியின் வளர்ச்சி பொதுவாக பெண்களுக்கு 12 வயதில் ஏற்படும். ஆண்களுக்கு சற்று தாமதமாக 14 அல்லது 15 வயதில் நிகழும். பெண்ணின் அடிவயிற்றில் உள்ளே இருபுறங்களிலும் அண்டகோசம் என்ற பகுதி உள்ளது.


இங்கு தான் அண்ட அணு வளர்ச்சி அடைகிறது. பாலியல் சுரப்பிகள் வளர்ச்சி அடைந்த காரணத்தால் அண்ட அணு வளர்ச்சி பெற்று பெண்ணின் கருப்பையை அடைகிறது. இவ்வாறு வந்த சினை முட்டை ஆணின் விந்தணுவுடன் இணையாவிட்டால் 21 லிருந்து 30 நாட்களில் செயலிழந்து பெண்ணின் பிறப்பு உறுப்பு வழியாக ரத்தமாக வெளியேறுகிறது. இவ்வாறு பெண்ணின் முதல் முதலான ரத்த ஒழுக்கு வெளியேறுவதை பெண் வயசுக்கு வந்துட்டா, பூப்பெய்திட்டா என்று பல்வேறு விதமாக அழைக்கின்றனர்.

ஆண்களுக்கு முதன்முதலில் விந்தணுக்கள் உற்பத்தியாகி குறிப்பிட்ட வயதில் ஆண் உறுப்பிலிருந்து விந்தாக வெளியேறும். இது ஆண்கள் வயசுக்கு வந்தற்கு சான்றாகும். ஆனால் ஆணைப் பற்றி எதுவும் குறிப்பிட்டு பேசும் வழக்கு சமூகத்தில் இல்லை. ஆண்களும் வயசுக்கு வருகின்றனர். ஆனால் வெளியே தெரிவதில்லை. இந்த விசயம் பலருக்குத் தெரிவதில்லை.

நமது சமூகம் ஆணாதிக்கமும் மூட நம்பிக்கையும் நிறைந்தது. இதனால் பெண்ணை சொத்தாகவும் போகப் பொருளாகவும் நினைக்கிறது. பெண் வயசுக்கு வந்துட்டா, பூப்பெய்திட்டா என்று சொல்லி நடத்தப்படும் விழாவானது (பூப்பு நீராட்டு விழா) அப்பெண் பிள்ளை பெறத் தகுதி பெறுகிறாள் என்று ஊருக்கு பகிரங்கமாக அறிவிக்கும் ஒரு அநாகரீகமான விழாவாகும். இம்மாதிரியான விழாக்கள் ஆண்களுக்கு நடத்தப் படுவது இல்லை. இந்த நவீன காலத்திலும் அவ்வாறு விழா செய்வது பொருட் செலவு (வீண்செலவு) செய்வது அறியாமை ஆகும். இதுபோன்ற பூப்பு நீராட்டு விழாக்கள் பார்ப்பனக் குடும்பங்களில் பெரும்பாலும் நடப்பதே இல்லை. ஆனால் பார்ப்பனரல்லாத குடும்பங்களில் பெரும்பாலும் இது நடை பெற்று வருகிறது. இந்த வீண் செலவு அறியாமை நிகழ்ச்சியை நடத்தாமல் தவிர்ப்பது சமூகத்திற்கு குறிப்பாகப் பெண்களுக்கு நல்லதாகும்.

2






**மாதவிடாய் அல்லது மாதவிலக்கு என்றால் என்ன?**

பெண்களுக்கு அடி வயிற்றின் உள்பகுதியில் அண்டகோசப் பகுதி Ovary அமைந்துள்ளது. பருவம் அடைந்த பெண்ணிற்கு இப்பகுதிலிருந்து வளர்ச்சியுற்ற அண்ட அணு பெண்ணின் கருப்பைக்கு வந்து சேரும். இது சராசரியாக 28 நாட்களுக்கு ஒரு முட்டை (அண்ட அணு) வீதம் கருப்பைக்குள் வந்து சேரும். இந்த கால அளவு 21 லிருந்து 30 நாட்கள் வரை அமையும். இது பெண்ணிற்கு பெண் வேறுபடும். இம்மாற்றம் பெண்ணின் வயது, உடல் அமைப்புப் பொறுத்து இருக்கும். இந்தச் சினை முட்டையுடன் கருச்சேர்க்கைக்காக ஆணின் விந்து அணு சேராவிட்டால் அது அங்குள்ள இரத்துத்துடன் இரத்தமாக கலந்து பெண்ணின் பிறப்பு உறுப்பிலிருந்து வெளியேறிவிடும். இந்த நிகழ்ச்சியே மாதவிலக்காகும். இந்த இரத்தப் போக்கானது கருப்பைச்சுவர் சிதைவதால் உண்டாகிறது. இந்த போக்கே 3 நாட்களிலிருந்து 5 நாட்கள் வரை இருக்கும். ஒரு முறை மாதவிடாய் நிகழ்ந்த பின்பு மீண்டும் கருப்பைச் சுவர் உருவாகும்.

**மாதவிலக்கின் போது அன்றாட வேலைகளைச் செய்யலாமா?**

மாதவிலக்கு நேரங்களில் அன்றாட வேலைகளைச் செய்யலாம். இது அவர்களது உடல் மற்றும் மனதிடத்தைப் பொருத்தது. அவர்களுக்கு ஏற்படும் மாதவிலக்கைப் பொருத்தும் பணிகளை நெறிபடுத்திக் கொள்வது நல்லது. உழைக்கும் பெண்கள் (சித்தாள், வயல்வேலைசெய்பவர்கள்) மாதவிலக்கு நேரத்திலும் கடுமையான பணிகளை மேற்கொள்கின்றனர். மாதவிலக்கினால் ஏற்படும் உடற்சோர்வையும், மனச்சோர்வையும் மற்றவர்கள் குறிப்பாக ஆண்கள் புரிந்து நடப்பது அவசியம்.

**மாதவிலக்கு நேரங்களில் பெண்களை தனியாக உட்கார வைப்பது சரியா?**


தவறு. இம்மாதவிடாய் நாட்கள் பெண்ணின் ஆரோக்கியத்தையும் உடல் நிலையையும் பொறுத்து அமையும். சிலருக்கு தலைவலி, வயிற்று வலி போன்ற பக்க விளைவுகள் ஏற்படும். இது போன்ற நேரங்களில் உரிய மருத்துவமும், தக்க ஓய்வும் எடுத்துக்கொள்வது நலம். ஆனால் அச்சமயத்தில் தொட்டால் தீட்டு என்ற மூடநம்பிக்கையுடன் பெண்ணை ஒதுக்கி வைக்கக்கூடாது. ஏனெனில் இதனால் அப் பெண்ணிற்கு உள்ளத்தில் சங்கடம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அறிவியல் வளராத காலத்தில் அவ்வாறு செய்தார்கள். இப்போது அறிவியல் வழியில் நடப்பது நல்லது. இது போன்ற சமயங்களில் பெண்கள் சுகாதார முறையுடன் கூடிய தூய்மை துண்டுகளைப் பயன்படுத்தி இயல்பாக இருக்க முயற்சிக்கலாம். மாதவிலக்கு என்பது மலம், சிறுநீர், வியர்வை போன்று ஒரு கழிவு வெளியேற்றும் செயலே ஆகும். பெண்களை மாதவிலக்கின் போது தொடுவதாலோ அருகிலிருப்பதாலோ எவ்வித தீங்கும் ஏற்படாது.

**ஆணின் விந்து எப்படி உருவாகிறது ?**

பெண்ணின் அண்டகோசத்தில் அண்ட அணு உருவாதல் போல ஆணின் விந்தகத்தில் Testis இருந்து நுண்ணிய குழாய்களின் உள்ளே உயிரணுக்கள் உற்பத்தியாகின்றன. இவை ஒவ்வொரு விந்துகத்திலிருந்தும் தனித்தனி குழாய்களின் மூலம் பகுதிக்கு 1 வீதம் விந்துப் பைகளை அடைகிறது. அங்கிருந்து சிறுநீர்க் குழாய் வழியாக வெளியே வரும். அப்போது வழியில் அமைந்துள்ள சில சுரப்புகளும் அத்துடன் கலந்து வெளியேறி வருகின்றன. அதனையே விந்து என்கிறோம். விந்துக்களை தாங்கிச்செல்லும் திரவத்தை ப்ராஸ்ட்டாடிக் சுரப்புகள் சுரக்கின்றன.

**கருவுருதல் என்றால் என்ன ?**

கருப்பைக்கு வெளியே பிளோப்பியன் குழாயில் ஆணின் உயிரணுவும் (Sperm) பெண்ணின் கருமுட்டையும் Ovum சேரும்போது கருவுருதல் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி மாதவிலக்கு தொடங்கிய 13 லிருந்து 15 நாட்களுக்குள் நடைபெறுகிறது. கருவுற்ற முட்டை பெண்ணின் கருப்பையை நோக்கி நகருகிறது. 30 மணி நேரம் கழித்து அது இரண்டு செல்களாகப் பிரிகிறது. 50 மணி நேரம் கழித்து அது 4 செல்களாக, 16,32,64,128 அதற்கு மேலான செல்களாக பிரிகிறது. அதன் பின் பல ஆயிரக்கணக்கான செல்களாக உருவான பின்



இத்தகைய செல்கள் பந்து பளோப்பியன் குழாய் வழியாக (Fallopian tube) கர்ப்பப்பையினை 4 அல்லது 5 நாட்களில் அடைகிறது. இதனையே கருவுறுதல் என்கிறோம்.

**எந்தந்த நேரங்களில் உடலுறவு வைத்துக் கொண்டால் கரு உண்டாகும்?**

உடல் உறவுக்குப் பின் ஆணின் விந்தணு பெண்ணின் சினைமுட்டையைச் சந்தித்துக் கலந்தால் ஒழிய கர்ப்பம் ஏற்டாது. ஒவ்வொரு மாதமும் ஒரு பெண் தனது அண்டகோசத் திலிருந்து (Ovary) ஒரே ஒரு சினை முட்டையை மட்டும்தான் வெளியிடுகிறாள் என்று அறிவியல் முறையில் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் சில பெண்கள் இந்த விதிக்கு விலக்காக இரண்டு சினை முட்டையையும் வெளியிடக்கூடும். அவை இரண்டு கருவானால் இரட்டைக்குழந்தை பிறக்கும். பெண்ணின் சினை முட்டை வெளியாகும் நாளுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் உடல் உறவு கொள்ள நேரிட்டால் கர்ப்பம் ஏற்படாது.

ஏனென்றால் ஆண் விந்தணு பெண் சினை முட்டையை கருத்தரிக்கச் செய்யும் சக்தியை 48 மணி நேரத்திற்குள் இழந்து விடுகிறது. அதேபோல பெண்ணின் சினை முட்டை வெளியாகும் நாளுக்கு இரண்டு தினங்களுக்குப் பின்னர் உடல் உறவு கொள்ள நேரிட்டாலும் கர்ப்பம் ஏற்படாது. ஏனென்றால் பெண் கருமுட்டை இந்த 48 மணி நேரத்திற்குள் கருத்தரிக்க கூடிய சக்தியை இழந்து விடுகிறது. ஆகையால் பெண் சினை முட்டை வெளியாகும் சரியான நேரத்தை முன்னதாகக் கண்டுபிடிக்கும் முறை தெரிந்தால் ஒவ்வொரு மாதத்திலும் இந்த கருத்தரிக்கக் கூடிய 13 நாட்களில் குறிப்பிட்ட 5 நாட்களை கருத்தரிக்கும் நாட்கள் Fertile Period என நிர்ணயிக்கலாம்.

**நமது சமூகம் ஆணாதிக்கமும் மூட நம்பிக்கையும் நிறைந்தது. இதனால் பெண்ணை சொத்தாகவும் போகப் பொருளாகவும் நினைக்கிறது. பெண் வயசுக்கு வந்துட்டா, பூப்பெய்திட்டா என்று சொல்லி நடத்தப்படும் விழாவானது (பூப்பு நீராட்டு விழா) அப்பெண் பிள்ளை பெறத் தகுதி பெறுகிறாள் என்று ஊருக்கு பகிரங்கமாக அறிவிக்கும் ஒரு அநாகரீக மான விழாவாகும். இம்மாதிரியான விழாக்கள் ஆண்களுக்கு நடத்தப் படுவது இல்லை.**

இந்தக் கருத்தரிக்கும் நாட்களில் மட்டுமே ஆண், பெண் உடல் உறவு கொண்டால் குழந்தை ஏற்படலாம். ஆகையால் கருத்தரிக்கும் நாட்கள் (Fertile Period) பெண் சினை முட்டை வெளியாகும் ஒரு நாளும் அதற்கு முன்னர் இரண்டு நாட்களும் பின்னர் இரண்டு நாட்களுமாக மொத்தம் 5 நாட்கள் எனக் கொள்ளலாம். கருவுறுவதைத் தடுக்க விரும்புவர்கள் இந்த நாட்களில் தகுந்த கருத்தடை சாதனங்கள் மூலம் உடலுறவு வைத்துக் கொள்வது நல்லது.

**மலட்டுத் தன்மை என்றால் என்ன?**

ஆண், பெண் இருவருக்கும் ஊட்டம் போதாமை, அயொடின் குறைவு, இரத்தசோகை போன்ற காரணங்களால் வருவது மலட்டுத் தன்மை ஆகும். இதனால் குழந்தை பிறக்கும் தன்மையை இருவரும் இழக்கலாம். இவ்வாறு உள்ளவர்கள் தகுந்த மருத்துவரை அணுகிட வேண்டும்.

**கருவுண்டாகாமைக்குக் காரணம் என்ன?**

கருவுண்டாகமைக்குக் காரணம் ஆணாகவும் இருக்கலாம், பெண்ணாகவும் இருக்கலாம்.

**ஆணுக்கு நேரக்கூடிய குறைகள்**

1. ஆணின் விந்து மற்றும் பிற சுரப்பிகள் சரியாக இருக்கும். ஆனால் ஆணின் உறுப்பு போதிய எழுச்சியும், விரைப்பும் பெற முடியாமலிருந்தால் விந்தை பெண்ணின் கருப்பைக்குள் சரியாகச் செலுத்த முடியாது. அப்போது கருத்தரிப்பு நிகழாது. இது பிறப்பிலிருந்தே அமையும் வகையாகும்.

2. சரியாக உள்ள ஆணின் விந்தணுக்கள் செலுத்தப்பட்டும் பெண் கருவுற முடியாமைக்கு வேறுபல காரணங்கள் உள்ளன. அவைகள்

**அ.** ஆணின் விந்தில் போதுமான எண்ணிக் கையில் உயிரணுக்கள் இல்லாதிருக்கலாம்.

**ஆ.** கருத்தரிக்கும் முன் பெண்ணுடலில் ஆண் அணு அதிகபட்சமாக 24 மணி நேரம் உயிருடன் இருக்கும். இந்த நேரத்திற்குள் ஆண் அணு பெண்ணின் உறுப்பிலிருந்து உட்புறமாக நீந்தி பெண்ணின் அண்ட குழாய்க்கு வந்துவிட்ட

சினை முட்டையை அடைந்து அதை துளைத்து உள்ளே சென்றுவிடும்.

ஆனால் ஆண் அணுவின் வாழ்வுக்காலம் குறைவாக இருந்தால் சினை முட்டையை அது அடைய முடியாது. இதனால் கருத்தரிக்காது. ஒருவேளை ஆண் அணுக்கள் தேவையான அளவு வேகத்துடன் நகரக்கூடியதாக இல்லா விட்டாலும் கருத்தரிப்பு நிகழாது. (சாதாரண மாக ஆண் அணுவிற்கு பெண் உறுப்பினுள் 1 அங்குலம் நீந்திச்செல்ல 8 நிமிடங்கள் தேவைப் படுகிறது.)

**இ.** அதிக உடல் கொழுப்பு, அளவுக்கு மீறிய மது, நோய் போன்றவற்றால் விந்து உற்பத்தியாகமலிருக்க வாய்ப்புள்ளது. விந்து உருவாக விதைகளுக்கு (Testis) குளிர்ந்த சூழ்நிலை தேவை. ஆதலால் மிகவும் இறுக்கமான (நைலான்) உள்ளாடைகளாலும், (ஜட்டி ) சிக்கல் வர வாய்ப் புள்ளது. இதனால் கருத்தரிக்காது.

**ஈ.** விந்து உருவாகும் சுரப்பிகளில் அடைப்பு ஏற்பட்டால் கருத்தரிக்காது. இத்தகைய குறைபாடு பால்வினை நோய்களால் ஏற்படலாம்.

**பெண்ணுக்கு நேரக்கூடிய குறைகள்**

பெண்ணின் கருப்பையில் கோளாறு ஏற்பட்டு சினை முட்டை உற்பத்தி ஆவதிலேயே இடையூறு ஏற்படுத்துதல், சினை முட்டை உயிரற்று இருத்தல், சினை முட்டையில் உண்டாகிற திரவம் சரியாக உற்பத்தியாகாமல் தடைபடுதல், கருக்குழாய்களிலே கோளாறு ஏற்படுதல், கருப்பை சிறுத்திருத்தல், கொழுப்பு சேர்வது காரணமாக கருப்பை தடிதிருத்தல், கருப்பை இறக்கம்

**ஆண்,பெண் இருவருக்குமான பொதுவான குறைபாடுகள்:**

1. பெண்ணுறுப்பினுள் உள்ள திரவங்கள் காடித்தன்மை (Acidity) வாய்ந்தவை. இந்த காடித்தன்மையினால் ஆண் ஒரு முறை வெளியிடும் விந்திலுள்ள 50 கோடி உயிரணுக்களில் பாதிக்கு மேல் பெண்ணின் பிறப்புறுப்பின் பாதி வழியிலேயே மடிந்து விடும். சில உயிரணுக்களாவது சினை முட்டையைச் சென்றடைய வேண்டுமென்றால் அவற்றிற்கு ஓரளவிற்காவது பாதுகாப்புக் கவசம் அவசியம். இதைத்தருவது ஆண் அணுக்களோடு சேர்ந்து வெளிவரும் கொழகொழப்பான திரவம் ஆகும். இந்த திரவத்தின் அளவு குறைவாக இருந்தாலும் மொத்த ஆண் உயிரணுக்களும் பெண்ணுறுப்பில் பாதி வழியிலேயே இறந்துவிடும். இதனால் கருத்தரிப்பு நிகழாது.

2. பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட ஆண், பெண் இருவருக்கும் கருத்தரிப்பு நிகழும் வாய்ப்புக்குறைவு. இந்நோய் ஆரம்பத்திலேயே (கடுமையாக முற்றுவதற்கு முன்பாக) கண்டறிந்து குணப்படுத்தினால் இக்குறைபாட்டிலிருந்து தப்பிவிடலாம்.

பிறவியிலிருந்தே ஏற்படும் கோளாறு களைத் தவிர மற்ற கோளாறுகளில் சிலவற்றை சரி செய்ய முடியாது. எனவே தகுந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவதன் மூலம் குணப்படுத்த முடியும்.

**குழந்தை பெண்ணாகவே பிறப்பதற்கு காரணம் ஆணா? பெண்ணா?**

பெண்ணின் கருமுட்டையிலிருந்து எப்போதும் X குரோமோசோம்கள் மட்டுமே வெளிவரும். ஆணின் விந்தணுவிலிருந்து X மற்றும் Y ஆகிய இரண்டு வகை குரோமோ சோம்களும் வெளிவரும். ஆணின் விந்தணுவில் உள்ள X குரோமோசோம் பெண்ணிடமிருந்து வரும் ஒரே வகையான X குரோமோசோமுடன் சேர்ந்தால் பெண் குழந்தை பிறக்கும். ஆணின் விந்தணுவில் உள்ள Y குரோமோசோம் பெண்ணின் கருமுட்டையிலிருந்து வெளிவரும் X குரோமோசோமுடன் சேர்ந்தால் ஆண் குழந்தை பிறக்கும்.

பிறக்கும் குழந்தை ஆணாக இருக்க வேண்டுமானால் ஆணின் விந்தணுவில் உள்ள Y குரோமோசோம் பெண்ணைச் சென்று சேரவேண்டும். அவன் கொடுப்பது X ஆக இருந்தால் ஆண்குழந்தை பிறக்காது. பிறக்கப்போகும் குழந்தை ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறப்பதை நிர்ணயிப்பது ஆணின் விந்தணுக்களே தவிர பெண் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்கிறது அறிவியல்.

ஆண்குழந்தைதான் உயர்வானது என்ற எண்ணம் தவறானது என்பதை அறிவார்ந்த மக்கள் உணரத்தொடங்கி விட்டார்கள். அதேசமயம் ‘பெண் குழந்தை பெற்றுத் தருகிறாள்’ என்று குற்றம்சாட்டி மனைவியை விவாகரத்து செய்வதும், கொடுமைப் படுத்துவதும், கேவலப்படுத்துவதும், முதல் மனைவியுடன் வாழும் போதே ஆண் குழந்தைக்காக இரண்டாவது திருமணம் செய்து கொள்வதும் எந்தக் குற்றவுணர்ச்சியும், அறிவும் இல்லாமல் சமுதாயத்தில் நடந்துகொண்டுதான் வருகிறது.

**- தொடரும்**

# பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை

நடத்தும்

## சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி

Certificate Course on Self-Respect Way of Life

40 வாரங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் 6 மணி நேர முழுநாள் பயிற்சி

தமிழக, இந்திய, உலகத் தத்துவங்கள்: வேலைவாய்ப்பிற்கான பாடங்கள் கற்பிக்கப்படும்

[illegible]

மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள் ஆண், பெண் இருபாலரும் சேருங்கள் !

மொத்தப் பயிற்சிக் கட்டணம் ரூ. 1,500 மட்டுமே ! பயிற்சி நாளில் பகல் உணவு உண்டு.

பயிற்சிக்கான பாடங்கள்

பகுதி I : [illegible] அம்பேத்கரியம், [illegible] சுயமரியாதை வாழ்வியல் பாடங்கள்.

பகுதி II : தமிழ் [illegible] (Proof Reading), [illegible] (Translation), [illegible]

**விண்ணப்பம் அனுப்பக் கடைசி நாள் : 20-08-2015**

**பயிற்சி வகுப்புகள் தொடங்கும் நாள் : 20-09-2015**

விண்ணப்பக் கட்டணம் : ரூபாய் 25 [illegible]

[illegible]

www.periyarnagammai.org

[illegible]

முதன்மைச் செயல் அலுவலர்

பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை

இந்திய - அயலக மொழிகள் பண்பாட்டு நிறுவனம்

27/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 053.

[illegible]

## விமர்சன மடல்கள்




**கவிஞர் தமிழேந்தி**

தோழமை சான்றீர் வணக்கம்.

பொள்ளாச்சி மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் சி.விஜயரகவன் அவர்கள் வழியாக சில 'காட்டாறு' இதழ்களைப் பெற்றேன். இதழ்களைப் படித்து எல்லையற்ற மகிழ்ச்சியுற்றேன். இதழ்களின் உள்ளடக்கம், வடிவமைப்பு, படங்கள் போன்றவை என்னைப் பெரிதும் கவர்ந்தன. நல்ல கருத்துக்களேனும் அவற்றை நேர்த்தியான வடிவமைப்போடு தந்தால் நம் கருத்தைச் சாராதவர்களையும் அவை சென்றடையும் என்பதற்குக் 'காட்டாறு' நல்ல எடுத்துக் காட்டு.

'உனக்கு முருகன் என்றால் எனக்குப் புத்தர்', 'சாதிவெறி கனன்று கொண்டிருக்கும் தளத்தில் சாதி மறுப்புத் திருமணங்கள்' என்பன போன்ற நெற்றியடியான தலைப்புகளோடு, விழிகளை ஈர்க்கும் வண்ணத்தில் அட்டைப் படங்கள் அமைந்துள்ளன.

உள்ளேயும் மிகப் பொருத்தப்பாடான தற்காலச் சுழலுக்கேற்ப பெரியார் எழுத்துக்களை எடுத்தாண்டுள்ளீர்கள். 'பறைச்சி எல்லாம் ரவிக்கை போட்டுக் கொண்டார்கள்' என்று பெரியார் பேசியதன் நோக்கம் என்ற அய்யாவின் உரையை இதற்கு எடுத்துக்காட்டாக சொல்லலாம்.

தோழர் அதிஅசுரன் அவர்களின் 'அன்று மனுதர்மம் இன்று தமிழ் தேசியம்' என்னும் ஆழமான கட்டுரைத் தொடர் இதழுக்கு வலு சேர்க்கிறது. முனைவர். பூ.மணிமாறன், யாழ்மொழி, புங்குழலி, இலக்கியா போன்ற தோழர்களின் எழுத்துப் பங்களிப்புகளும் நிறைவைத் தருகின்றன. உ.பி.அதிகார மய்யங்களில் பார்ப்பன ஆதிக்கம் சிறப்பான தொடர். திரைப்படங்கள் குறித்த ஆழமான திறனாய்வுகளும் தேவையான பகுதிகளே!

மறைந்த பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் நினைவுச் சிறப்பிதழ் அரிய கருத்துக் கருவூலமாகும். அவ்விதழ் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.

சிலப்பதிகாரம் குறித்த அதிரடியான கருத்துக்களை நாம் சற்றே அடக்கி வாசிக்கலாம். 'கண்ணகிக்குச் சிலை வைப்பது பெண்களைக் கேவலப்படுத்துவது ஆகும்'. 'சிலப்பதிகாரம் தேவடியாளுக்குச் சமமானது' என்றெல்லாம் தலைப்பிட்டு எழுதுவது பற்றி என்னுக! நூற்றுக்கு நூறு அவை உண்மை என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் நாம் அய்யா போன்ற ஆளுமை உடையவர்கள் அல்லரே! 'மொழித்தொல்லை' என்ற தலைப்பில் உடுமலைத் தோழர்கள் பெரியார் மொழிக் கொள்கைபற்றிப் பேசியவற்றை இன்று வெளியிட வேண்டிய சூழல் என்ன? பிற பின்

**கிருபா நந்தினி**

**(முனைவர் பட்ட ஆய்வாளர்)**

வணக்கம் தோழர்.

பக்கம் எண் 30-ல் அதிகம் படித்தவன்தான் அதிகப் படியான சுயநலவாதியாக உருவாகிறான். என்று முனைவர் பூ. மணிமாறன் அவர்கள் சொல்லியிருப் பதைப் போல நான் சுயநலவாதியாகவே கல்வி சம்பத்தப்பட்ட தலைப்பு களுக்கு முன்னுரிமை கொடுத்து, மற்ற தலைப்புகளை கடைசியில் தான் படித்தேன்.

மேலும் நான் விலங்கியல் துறை மாணவி என்பதால் பொதுவாகவே கலை மற்றும் ஐ.டி துறைகள் மீது ஒரு எதிர்மறையான கருத்து.

'நாம் என்ன படிக்க வேண்டும் என்பதை கார்ப்ரேட் கம்பெனிகள் தான் தீர்மானிக் கின்றன' என்ற தலைப்பு சுவாரசியமே எனக்கு.

முதலில் பொது மக்களுக்கு மட்டுமல்ல பொறியியல் துறை மாணவர்கள் மற்றும் கார்ப்ரேட் கம்பெனிகளுக்குச் செல்பவர்களுக்கே கூட தெரியாத வரலாற்றைப் பதித்திருப்பது திருப்பி அளிக்கிறது.

-தொடர்ச்சி 17ஆம் பக்கம்

கிருபா நந்தினி
முனைவர் பட்ட ஆய்வாளர்

# சுற்றுச்சூழல் அழிவும் இந்துமதமும்

"மண்ணுக்கு மரம் பாரமா?
மரத்துக்கும் கிளை பாரமா?
கிளைக்கு ..காய் பாரமா? பெற்றெடுத்த
குழந்தைக்கு தாய் பாரமா?

இது ஒரு தமிழ் திரைப்படப்பாடல்

இதிலே, பாரமா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளவைகள் உண்மையில் பாரமல்ல. அவை ஒவ்வொன்றும் ஒன்றுக் கொன்று ஆதாரம். ஆனால், பாரமாய் நினைக்கிற நிலைமை வந்துவிட்டதே என்கிற ஏக்கத்தில் பாடப்பட்டதே அப்பாடல்.

மனிதனுக்கு மட்டுமல்ல. பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படை ஆதாரமாய் இருப்பவை நிலம் - நீர் - காற்று இம் முன்றும் தான். இம்முன்றின் இயல்புத்தன்மை பாதுகாக்கப்படுகிற வரைதான் பூமியில் உள்ள உயிர்களின் வாழ்க்கையும் பதுகாப்பாய் இருக்கும். விஞ்ஞானம் வளராத காட்டுமிராண்டிக் காலத்தில் பூமியின் சுழற்சியும், உயிர்களின் வாழ்வியல் அமைப்பும், இயற்கை சூழலும் மிகமிகப் பாதுகாப்பாய் இருந்தன. மனித அறிவின் வளர்ச்சிக்குப் பின்னர் வளர்ந்திருக்கிற விஞ்ஞானத்தின் விளைவாக பூமியின் இயல்பும், உயிர்களின் வாழ்வியல் அமைப்பும் அடியோடு மாறிப் போய்விட்டது.



இப்போதும் அப்படியான ஒரு கேள்வி யைத்தான் வேதனையோடு எழுப்ப வேண்டியிருக்கிறது. என்ன கேள்வி? பூமி மனிதனுக்கு ஆதாரமா?மனிதன் பூமிக்கு அபாயமா? என்பது தான் அந்தக் கேள்வி. இந்த இரண்டு கேள்விக் களுக்குமான ஒரே பதில் வேதனையோடு கூடிய 'ஆம்' தான்

மனித வாழ்வின் ஆதாரமாய் இருக்கிற பூமிக்கு மனிதன் ஆதரமாய் இருக்கின்றானா? இல்லை, அபாயமாக மாறியிருக்கிறான்.இது பூமிக்கு மட்டுமே நேர்ந்திருக்கிற அபாயமல்ல. பூமியை நம்பியுள்ள அனைத்து உயிரினங்களும் ஏன் மனிதவாழ்வுக்கே நேர்ந்துள்ள அபாயம் என்பதை நாம் எப்போது உணரப் போகிறோம்? நாம் உணர்ந்து எழுதுவதற்குள் பூமி என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும் போல் இருக்கிறது.

விஞ்ஞானம் என்பது ஆய்வு, தேடல், எது சரி? எது தவறு? என்று ஆய்ந்து முடிவெடுப்பது. அதாரத்தோடு தீர்மானிப்பது, நல்லதை ஏற்பது, தீயதைத் தவிர்ப்பது இது தான் 'பகுத்தறிவு' 'விஞ்ஞான ஆய்வு' உலகம் குறிப்பாக மேற்குலகம், இன்னும் குறிப்பாக அமெரிக்க அய்ரோப்பிய உலகம் விஞ்ஞானத்தின் விளைச்சலைப் பயன்படுத்தி அறுவடை செய்து கொண்டு மனிதவாழ்வை சுவை மிக்கதாக, விருப்பத்துக்குரியதாக உருமாற்றிக் கொண்டே வருகிறது.

ஆனால் விஞ்ஞானத்தைக் கூட மூடத் தனத்தின் முடைநாற்றம் பிடித்த தொட்டில்களில் மூழ்கடித்து அதன் மூலம் தனது தனிப்பட்ட மேலாதிக்கத்தை பாதுகாத்துக்கொண்டு

சமூகத்தைப் பற்றிய கவலையோ அக்கறையோ இல்லாமல் 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்' என்கிற சிந்தனைப்போக்கில் போய்க் கொண்டிருக்கிற இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளோ, மனித வாழ்வை சுமையானதாக உருமாற்றி வைத்துக் கொண்டு, புவியின் இயற்கையை, வாழ்வின் அமைப்பை நாசம் செய்து கொண்டு இருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த அவலத்தையே தனது கலாச்சாரப் பாதுகாப் பென்றும், பண்பாட்டு அடையாளம் என்றும் பறை சாற்றி, யாரும் இதன் மீது எந்தக்கருத்தும் சொல்லிவிடாதபடி இந்தக் கேடுகெட்ட சூழலைப் பாதுகாத்தும் வருகிறது. விளைவு விஞ்ஞானமும், பகுத்தறிவும் இங்கே பஞ்சாங்கக் குறிப்புகளுக்குள் குப்பையோடு குப்பையாக கொட்டப்பட்டு கேட்பாடற்றுக்கிடக்கிறது. உதாரணத்திற்குச் சொல்வதென்றால் ஏகப்பட்ட ஆதாரங்களை நிறுவ முடியும்.ஆனாலும் குறிப்பிட்ட சிலதை சொல்கிறேன்.

மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்ப தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இயற்கைக்கு மாறாக சில செயற்கைத் திட்டங்களைத் தீட்டுவதும், செயலாக்குவதும் தவிர்க்க முடியாததுதான். குறிப்பாக உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றில் சில வசதிகளை உருவாக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாதாகிவிட்டது. ஆனால் அதன் விளைவுகளில் விளையும் தீமைகளைக் கண்டறிந்து அவற்றைக் களையவும் நன்மைகளை பெருகச் செய்யவுமான சிந்தனையை அறிவு வளர்ச்சியைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். இதிலே மேற்குலக நாடுகள் ஓரளவு மாற்றங்களை ஏற்றுக் கொள்ள முன் வந்த போதும் இந்தியா போன்ற பிற்போக்கு நாடுகள் மாற்றங்களை ஏற்க மறுத்து பிடிவாதமாய் நிற்பதால் விஞ்ஞானத்தின் முன்னேற்றங்களை விட சீர்கேடுகளே இங்கு மலிந்து கிடக்கின்றன.

அதுவும் குறிப்பாக இந்தியாவைப் பொறுத்த மட்டில் 'உலகின் குப்பைத் தொட்டி' என்றே சொல்லலாம். உலகில் தடை செய்யப் பட்ட விவசாய இடுபொருட்கள், மருந்துகள், விதைகள் அனைத்திற்கும் இந்திய நிலங்களே பலியாகி வருகின்றன.

'e-waste' குப்பைகள் எனப்படும் மின் சாதனக் குப்பைகளுக்கும் (கம்யுட்டர், லேப்டாப், செல்போன்) இந்தியாவே சரணாகதி. இங்குதான் கேட்பார் யாருமில்லாத யாருக்கும் கேட்கத்தோன்றாத சமூக அமைப்பு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தோராயமாக 40 மில்லியன் மெட்ரிக் டன் 'E' குப்பைகள் உலக அளவில் குவிக்கப்பட்டது என்று ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) 2013 ல் தகவல் வெளியிட்டது. அதில் 70% மற்ற நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு கொண்டு வந்து குவிக்கப் பட்டதாக UNEP கூறுகிறது.

எதற்கெடுத்தாலும் நமக்கென்ன? என்று ஒதுங்கிப் பின் வாங்குகிற 'பாதுகாப்பு' மனிதர்களின் பூமியாய் விளங்குகிறது இந்தியபூமி. பிறகென்ன? மேற்குலக நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் பெருத்த நம்பிக்கை எந்தக் கழிவாக இருந்தாலும் இந்தியாவிற்குள் தள்ளிவிடலாம், தடையே இருக்காது என்று. காரணம், இங்கே மண்ணைப் பற்றி, நீரைப்பற்றி, காற்றைப்பற்றி, காட்டைப்பற்றி, சுற்றுச்சூழல் பற்றி, உயிரினங்கள் பற்றி மட்டுமல்ல, இந்தச் சக மனிதனைப் பற்றியே கவலைப்படாத ஒரு மக்கள் கூட்டமாக, மந்தையாகத் திறிகிறார்களே!

வீட்டைக்கூட்டி வீதியில் தள்ளுகிற பிற்போக்குத்தனம்தான் இந்த மண்ணின் உயர்ந்த கலாச்சாரமாக, உயர்ந்த பண்பாடாகப் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. கொஞ்சமாவது சுற்றுச்சூழல் குறித்த கவலை, அக்கறை யாருக்காவது இருக்குமானால் ஒவ்வோர் ஆண்டும் மூன்றடி உயரத்திலிருந்து முப்பது அடி உயரம் வரைக்குமான அளவில் உள்ள 'பிளாஸ்டர் ஆப் பாரிஸ்' (பிளாஸ்டர் சாந்து) என்னும் நச்சு வேதிக்கலவையினால் செய்யப்பட்ட சுமார் ஒரு கோடி சிலைகள் இந்த நாடு முழுவதும் உள்ள ஏரி, குளம், கண்வாய், ஆறு, கடல் என்று அத்தனை நீர் நிலைகளிலும் வண்ணச் சாயங்களோடு கரைந்து இயற்கையை அநியாயத்திற்குப் படுகொலை செய்கிற கொடுமையை விழாவாகக் கொண்டாடு வார்களா?

இதனால் 200% முதல் 300% வரை உலோக நச்சுக்களும், 100%கலங்கள் தன்மையும் ஏற்படுகிறது. இதற்கு கடவுள் பக்தி, மத அவதாரம் பூசப்படுகிறது. எந்த அறிவியலாளர்களாவது, எந்தவொரு சுற்றுச்சூழலியல்வாதிகளாவது துணிந்து 'விநாயகர் சதுர்த்தி' எனும் பெயரில் நடக்கும் இயற்கைக்கு எதிரான இந்த அக்கிரமத்தை எதிர்த்துக்குரல் கொடுக்க, போராட முன்வருவார்களா? வந்தால் மதவாதிகள் அவர்களை விடுவார்களா?

மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், அமைச்சகம், நீதிமன்றங்கள், ம்ம்..... யாரும் மூச்சு விடுவதில்லையே! அதே போல ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிற 'தீபாவளி' இந்த ஒரு

நாளில் மட்டும் சாதாரண நாட்களை விட 30% முதல் 40% வரையிலான காற்று மாசு அதிகரிக்கிறதாக மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

எத்தனை பெரிய சூழல் மாசு! இவை மட்டுமா? சடங்கு கழித்தல் எனும் பெயரில், நீர் நிலைகளில் வீசி எறியப்படும் கழிவுகள். உதாரணம்: கங்கை, பம்பா, காவிரி, தாமிரபரணி போன்ற புனித(?) ஆறுகள், சடங்கு கழித்தல் போன்ற செயல்பாடுகளினால் மட்டுமே 75% மாசுபடுகிறது என்று தேசிய ஆறுகள் பாதுகாப்பு அமைப்பகம் (NRCD) National River Conservation Directorate. வெளியிட்டுள்ளது.

பார்த்தான் வெள்ளைக்காரன் இதைவிட சிறந்த குப்பைத்தொட்டி உலகில் எந்த மூலையில் தேடினாலும் கிடைக்காது என்று முடிவு செய்து விட்டான். தன்னுடைய மண்ணின் வளத்தை இயற்கைச்சூழலை மாசுபடுத்தும் அனைத்துக் கண்டுபிடிப்புகளையும் கொண்டு வந்து இந்தியாவில் கொட்டிவிட்டுப் போகிறான். இவனும் பெருமையோடு ஆஹா எங்கள் ஆட்சியில் எவ்வளவு இறக்குமதி பாருங்கள்! என்று பெருமை அடிக்கிறான்.

இல்லாவிட்டால் 1973 ஆம் ஆண்டிலேயே அமெரிக்க அய்ரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்ட DDT எனும் பூச்சிக்கொல்லி மருந்தை இன்றைக்கு வரைக்கும் நாம் தயங்காமல் தயாரித்துக் கொண்டும், பயன்படுத்திக் கொண்டும் இருப்போமா?

இவ்வளவு ஏன், இந்த வேதியல் ‘பூச்சிக்கொல்லி’ எனும் இயற்கை உயிர்க்கொல்லி மருந்தைப்பற்றி 1962 ஆம் ஆண்டிலேயே ‘ரேச்சல் கார்சன்’ (Rachel Carson) என்ற அமெரிக்க பெண் விஞ்ஞானி ஆய்ந்து விரிவாகவும், விளக்கமாகவும் எழுதி வெளியிட்ட ‘சைலண்ட் ஸ்பிரிங்’ (Silent Spring) என்ற புத்தகம் இன்றளவும் தமிழில் வரவில்லையே! இப்படி எத்தனை அறிவியல் உண்மைகளை நாம் இழந்து கொண்டிருக் கிறோமோ!

இவைப்பற்றி சாதாரண விவசாயிக்கு ஒன்றும் தெரியாதுதான். பசுமை நாயகர் எம்.என்.சாமிநாத அய்யருக்குக் கூடவா தெரியாது? தெரியும். ஏன், சோவியத் யூனியனையே குலைநடுங்கச் செய்த ‘சொர்னோபில்’ அணுஉலை வெடிப்புக்குப் பின்னர் அதை அங்கு செயல்படுத்த எதிர்ப்பு வந்ததும், அதை அப்படியே தூக்கி இராஜீவ்காந்தியின் கையில் கொடுத்தது இரஷ்யா. அவரும் அதை இரண்டு கைகளிலும் ஏந்திக்கொண்டுவந்து கூடங்குளத்தில் போட்டு விட்டாரே? இங்குள்ள விஞ்ஞானிகளுக்கு தெரியாதா அணுவின் ஆபத்து! தெரியும்

சுப.உதயக்குமார் முன்னெடுத்த அணுஉலை எதிர்ப்புப் போரட்டத்திற்கு எந்தனை அவதூறுகள்? எத்தனை இழிசொற்கள்? அப்பப்பா. இந்த நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு நேர்ந்திருக்கிற அவலம் இருக்கிறதே அது உலகில் வேறு எந்த நாட்டிலும் நேராத அவலம்!

இந்தச் சூழலில் தான் இயற்கை ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் பாதுகாவலர்கள் என்பார் பலரும் இந்த வில்லங்கமான விவகாரத்தில் போய் அல்லல்பட முடியாது என்று கருதியோ என்னவோ மரம் நடு விழாவை நடத்திக் கொண்டு பாதுகாப்பாய் இருந்து கொள்கிறார்கள்.

இந்தச் சீர்கேட்டிற்கு என்னதான் தீர்வு? எதையும் ஏன்? எதற்கு? என்று ஆராய்ந்து பார்கின்ற பகுத்தறிவுச் சிந்தனையும், எதையும் ஏன்? எதற்கு? என்று தட்டிக் கேட்குற துணிவும், எதையும் ஏன்? எதற்கு? என்று அறிந்து ஏற்கும் சமூக அக்கறையையும் மக்களுக்கு ஏற்படுத்தியாக வேண்டும்.

கற்றறிந்தவர்கள், அறிவுஜீவிகள், விஞ்ஞானிகள் என்போர் தமது ஆய்வை, அறிவை அறிந்தவற்றை நம்முடைய மக்களுக்கு, மக்களின் மொழியில் கற்றுத்தர முன்வர வேண்டும். தான் அறிந்தவரை தவறு என்று அறிந்தவற்றை தொடர அனுமதிக்காமல் அதை தடுக்க மக்களைத் திரட்டும் முனைப்பான பணியிலும் துணிவோடு ஈடுபட வேண்டும். (முனைவர் சுப.உதயகுமார் அவர்கள்)

அச்சு ஊடகம், காட்சி ஊடகம், கலை இலக்கியங்கள் என அனைத்து வடிவங்களாலும் இந்த அறிவியலை நாம் மக்களிடையே பரப்புரை செய்ய வேண்டும். இவையெல்லாம் தான் இப்போதைய அவசர அவசியப் பணியாக சூழலியல்வாதிகள் முன்னிற்கிற கடமை என்று நான் கருதுகிறேன். இதைவிட இன்னும் சிறந்த கருத்துக்கள், ஆலோசனைகள் இருப்பின் தெரிந்தவர்கள் சொல்லுங்கள். கூடிச் சிந்திப்போம்! கூடி முடிவெடுப்போம்!

இனியொரு விதி செய்வோம்! இயற்கைக்கு எதிராய் கெட்ட போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம்!

# வரலாற்றுப் பதிவுகள்

பொள்ளாச்சி விஜயராகவன்

தோழர்களே இந்தியாவில் 2000 வருடங்களுக்குப் பிறகு ஒரு மகத்தான சமுதாயப்புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கிறது. திராவிடர் கழகத் தலைவர் பெரியார்தான் இந்தப் புரட்சியைச் செய்தவர் என்கிறார் அமெரிக்காவின் மூத்த பேராசிரியர் ஜான் ரைலி. ( ஆனந்தவிகடன் 16.07.1972)

ஆனால் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்த சமுதாயப்புரட்சி, அதனால் எற்பட்ட மாற்றங்கள், முன்னேற்றங்கள் எல்லாம் ஒரு தேக்க நிலையில் உள்ளது. எதனால்? புதிய தலைமுறைக்கு இது தொடர்பான எந்தச் செய்தியும் சென்றடையவில்லையே ஏன்? பெரியாரின் சமுதாயப் புரட்சிக்கான எழுத்தும், பேச்சும் திராவிடர் இனத்தின் மேன்மைக்காக நடைபெற்ற பழைய நிகழ்வுகளைப் புதிய தலைமுறைக்குச் சொல்லி மேற்கண்ட கேள்விகளுக்கு விடைதேடும் காட்டாறின் முயற்சியே இந்தப்பகுதி.

## இது சுதந்திர நாடா? – தோழர் பெரியார்

*தோழர்களே! சுதந்திரம் பெற்றுள்ள எந்த நாட்டிலாவது - இன்று பார்ப்பான், பறையன் இருக்க நீங்கள் பார்க்கிறீர்களா? வரலாற்று ஏடுகளிலாவது கண்டிருக்கிறீர்களா? மேல்சாதி முறையும், கீழ்சாதி முறையும் மடையர்களும், முட்டாள்களும் மான ஈனமற்ற மக்களும், காட்டுமிராண்டிகால மக்களும், மிருகப்பிராய மக்களும் வாழும் நாடுகளிலன்றோ இவை இருக்கக் கடமைப்பட்டவை. அப்படியிருக்க இந்தச் சுயராஜ்ய பூமியில், பாரதமாதாவின் கைவிலங்கும் கால்விலங்கும் அறுக்கப்பட்டு அவள் ஆனந்தக் கூத்தாடும் இந்தக் காலத்தில் என்னத்துக்காகப் பறையன் இன்னமும் இருக்கின்றான்? என்னத்துக்காக பார்ப்பான் இருக்கின்றான்?*

*வெள்ளையன் ஒழிந்தது போல வடநாட்டானும் ஒழிய வேண்டாமா இந்த நாட்டைவிட்டு? இந் நாட்டிற்குச் சுதந்திரம் வந்துள்ளது உண்மையாயின் எதற்காக ஒரு 'இமாலயப்பார்ப்பான்' ஒரு வடநாட்டவன் எங்கள் நாட்டிற்குப் பிரதம மந்திரியாய் இருக்க வேண்டும்? எதற்காக வடநாட்டவர்கள் இங்கிருந்து நம்மைச் சுரண்டிவர வேண்டும்? கேட்பாரில்லையே இத்தமிழ்நாட்டில்!*

*எதற்காக 23 ஜில்லாக்களையும், 1500 மைல் சமுத்திரக்கரையையும், ஏராளமான நன்செய், புன்செய்களையும், ஆறுகள், ஏரி குளங்கள், வாய்க்கால்களையும், எண்ணிறந்த சுரங்கங்களையும் கொண்ட நம்நாடு - அந்நிய வடநாட்டானுக்கு ஆட்பட்டிருக்க வேண்டும்? எதற்காக இந்த நாட்டை வடநாட்டான் ஆதிக்கத்திற்கு ஒப்படைத்துவிட்டு, இந்நாட்டவர்கள் அவர்களின் சிப்பந்திகளாக, ஏவலாள்களாகப் பணியாற்றி வரவேண்டும்? வேறு சுதந்திரம் பெற்ற நாடுகளைப் பார்த்தாயினும் உங்களுக்குப் புத்திவரக்கூடாதா?*

*சுயராஜ்யம் வந்தாலும் வந்தது - இந்நாட்டில் இதுவரை இல்லாதவர்களெல்லாம் வந்து புதிது புதிதாகக் குடியேறுகிறார்களே! மவுண்ட் ரோட்டிலுள்ள பெரிய பெரிய கட்டிடங்களெல்லாம் வடநாட்டவர்களுடையதாக ஆகி வருகின்றனவே! வியாபாரம், கைத்தொழில் இவைகள் யார் கையில்? இந்நாட்டு வியாபாரமும் கைத்தொழிலும் பெரும்பாலும் வடநாட்டவர்களின் கையில்தானே இன்று இருந்து வருகின்றன?* - சென்னை அயன்புரத்தில் 16. 10. 1948 இல் சொற்பொழிவு. விடுதலை 19.10.1948

## கலைவாணரின் 58 ஆவது நினைவு நாளில் அவர்குறித்த குறுந்தகவல்

*சிரிப்பும் சிந்தனையும் மனிதனுக்கு அழகு என்பதைக் கலைவடிவம் மூலம் அன்றாடம் பாடம் நடத்திய நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன் அவர்களின் நினைவு நாள் 30.08.1957.*

*தோழர் பெரியாரால் உச்சி மோர்ந்து போற்றப்பட்ட, பாராட்டப்பட்ட கலை உலகக் கனிகள் உண்டென்றால், அவர்கள் நடிகவேள் எம்.ஆர்.இராதாவும், என்.எஸ்.கே அவர்களுமே ஆவர். "இனி எனு.எஸ். கிருஸ்ணன் செத்தாலும் சரி, அவர் பணங்காசெல்லாம் நழுவி, அன்னக்காவடி கிருஸ்ணன் ஆனாலும் சரி, நாடகப்புரட்சி உலகைப்பற்றி சரித்திரம் எழுதப்பட்டால், அச்சரித்திரத்தின் அட்டைப்பக்கத்தில் கிருஸ்ணன் படம் போடாவிட்டால், அச்சரித்திரமே தீண்டப்படாததாக ஆகிவிடும். (குடி அரசு 11. 11. 1944) என்று தோழர் பெரியார் எழுதினார் என்றால், இதைவிட கலைவாணரின் பெருமைக்கும் தொண்டுக்கும் 'கட்டளைக்கல்' வேறு ஒன்றும் இருக்க முடியுமா?*

நன்றி - 'ஒற்றைப்பத்தி'
தி.க. வெளியீடு



# மொழி பக்தர்களே!

தோழர் பெரியார்

**தமிழ்வழிக்கல்விக்காகத் தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக பல ஆர்ப்பாட்டங்களும், கருத்தரங்கங்களும் நடைபெற்று வருகின்றன. தொடக்கக்கல்வி தாய்மொழி வழிக்கல்வியாக இருக்க வேண்டும் என்ற முழக்கம் தற்போது உயர்கல்வி வரைக்கும் தமிழ்வழியிலேயே நடக்க வேண்டும் என்ற முழக்கமாக மாறியுள்ளது. நமக்கு இதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஒத்த கருத்தும் இருக்கலாம். முதலில் தோழர் பெரியார் 'உயர்கல்வியிலும் தமிழ்வழி' என்பது குறித்து என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். படியுங்கள். அடுத்தடுத்த இதழ்களில் இந்த உரைபற்றிய விமர்சனங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். - தொகுப்புக்குழு.**

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மொழி பற்றிய 'விவாதங்களையும்', 'கிளர்ச்சிகளையும்' பார்த்தால் தமிழர்களுக்கு மொழி விஷயத்தில் ஒரு பொறுப்பான குறிக்கோள் இல்லை என்றுதான் தெரிகிறது.

பார்ப்பனர்கள் கட்டுப்பாடாக நாட்டு மொழி, அரசியல்மொழி இந்தியாக இருக்க வேண்டும், சிறப்புமொழி சமஸ்கிருதமாக இருக்க வேண்டும் என்கின்ற இலட்சியத்தில் இருக்கிறார்கள். சற்று ஏறக்குறைய எல்லாப் பார்ப்பனப் பிள்ளைகளும் இந்தி படித்து வருகிறார்கள். பார்ப்பனக் கட்சியாகிய சுதந்திரா (இராஜாஜி) கட்சி வடநாட்டில் இந்தி தேசிய மொழியாக மாத்திரமல்லாமல், அது அரசியல் மொழியாக ஆகவேண்டுமென்றும், தமிழ் நாட்டில் "இந்தி இருக்கலாம்; ஆனால் அரசியல் மொழியாக இருக்கக் கூடாது; இங்கிலீஷ் தான் அரசியல் மொழியாக இருக்கவேண்டும்" என்று கூறுகிறது. தி.மு.க. கட்சி "இந்தி கூடாது, அரசியல் தமிழில் நடத்தப்பட வேண்டும்" என்று கிளர்ச்சி செய்கிறது.

கிராமணியார் (ம.பொ.சி ) கட்சி "அரசியலில் இங்கிலிஷ் கூடாது; இங்கிலீஷ் மூலம் பாடங்கள் கூடாது; பள்ளிகளில் குழந்தை களுக்கு இங்கிலீஷ் பயிற்சி கூடாது; காலேஜு களில் இங்கிலீஷ் பாட போதனை நடத்தப்படவும் கூடாது; தமிழிலேயே தான் நடத்தப்பட வேண்டும்." என்றும், அதற்காகவே, தாம் சிறை செல்லப் போவதாகவும், மற்றும் மந்திரிக்கு கருப்புக்கொடி பிடிக்கப் போவ தாகவும் சொல்லுகிறது.

இவைகளைப் பார்த்தபின் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இன்றைய அரசியல் கட்சிக்காரர்கள், பெரிதும் தங்கள் கிளர்ச்சிக்கும், தாங்கள் இருப்பதாக காட்டிக்கொள்வதற்கும், இந்த மொழிப்பிரச்சனையையே கருவியாக வைத்துக்கொள்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நாம் அரசியலிலே எவ்வளவுதான் சுதந்திரம் பெற்று விட்டாலும் அறிவில், உலக வளர்ச்சித் தன்மையில் மேம்பாடு அடையா விட்டால் பெற்ற சுதந்திரம் எதற்குப் பயன்படும்? ஏதாவது ஒரு காரணம் சொல்லி ஜெயிலுக்கு போகவும், அதற்கு பண்டமாற்றாகப் பதவி (கூலி)

பயன்படலாமேயொழிய மக்களுக்கு நாட்டுக்கு - இதனால் என்ன பயன் ஏற்பட முடியும்?

நாட்டுக்குச் 'சுதந்திரம்' கிடைத்து இன்றைக்கு 20 வது ஆண்டு நடக்கிறது. 20 ஆண்டு சுதந்திர வாய்ப்பில் தமிழ் மக்கள் அடைந்த நிலை 'இங்கிலீஷ் வேண்டாம்', 'தமிழ் வேண்டும்' இது தானா? அய்யோ பைத்தியமே தமிழை. (பிற மொழிகளிலிருந்து மொழி பெயர்க்கப்படாத) தமிழ் மூலநூல்களை, தனித்தமிழ் இலக்கிய நூல்களில் எதை எடுத்துக்கொண்டாலும் அவற்றிலிருந்து எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்பதனால் இலக்கணப்படி அமைந்த தமிழ் 'சுவை' அல்லாமல் அறிவு, பகுத்தறிவு, வாழ்க்கை அறிவு, வளர்ச்சி அறிவு பெறுவதற்கான ஏதாவது ஒரு சாதனத்தை, சிறு கருத்தை பூதக்கண்ணாடி வைத்துத் தேடியாவது கண்டுபிடிக்க முடியுமா? கண்டுபிடித்து பயன்படுத்தப் பட்டிருக்கிறதா? என்று தமிழ் அபிமானிகளை வணக்கத்தோடு கேட்கிறேன்.

சிலப்பதிகாரம், விபசாரத்தனத்தில் ஆரம்பித்து, 'பத்தினி'த்தனத்தில் வளர்த்து, முட்டாள்தனத்தில் மூடநம்பிக்கையில் முடிந்த பொக்கிஷமாகும். கம்பராமாயணக் கதையை எடுத்துக்கொண்டால் வெறும் பொய்க் களஞ்சியம் அது. அதன் கற்பனையை எடுத்துக் கொண்டால் சிற்றின்ப சாகரம். அதாவது இது ஒரு மாதிரி காமத்துப்பால் என்றுதான் சொல்லலாம். நடப்பை எடுத்துக் கொண்டால் காட்டுமிராண்டித்தனத்தின் உருவம். இவற்றில் இன்றைய அனுபவத்திற்கு, அறிவு உலகப் போக்குக்கு, வளர்ச்சிக்கு, பயன்படக்கூடியவை என்பதாக என்ன காண முடிகிறது?

வைத்திய நூல்களை எடுத்துக்கொண்டால் வைத்தியன் பிழைக்கத்தான் அதில் வழி இருக்கிறதே தவிர, இன்றைய நிலையில் நோயாளி பிழைக்க, நோயைக் கண்டுபிடிக்க அதில் என்ன அதிசயம் இருக்கிறது? வான நூல்களை எடுத்துக்கொண்டால் மத சம்பந்தமான, புராண சம்பந்தமான புளுகுகள், ஆபாசங்கள் அவையும் 100க்கு 90 வடவன் கொண்டுவந்து, 'ஜோசியன்' பிழைக்கப் புகுத்தினதுடன் காரியத்திற்கு அனுபவத்திற்குப் பயன்படாத குப்பைக் கூளங்களைத் தவிர, தெரிந்து கொள்ள வேண்டிய, வளர்ச்சிக்கு பயன்படக்கூடிய சரக்கு அதில் என்ன இருக்கிறது?

தொழில்துறையில் விஞ்ஞான முறையை எடுத்துக் கொண்டால் தமிழில் இதற்கு எதாவது பயன்படக்கூடிய சரக்கு அதில் என்ன இருக்கிறது? விஞ்ஞான நூல்களை எடுத்துக்கொண்டால் ஜபம், தபம், மந்திரம், தபோமகிமை, ஞானதிருட்டி, தெய்வீகசக்தி போன்ற காட்டுமிரண்டித்தனங்களைவிட காரியசித்திக்கு, அனுபவத்திற்கு ஏற்ற சாதனம் அதில் - தனித்தமிழ் (பூர்விக - இக்கால) நூல்களில் எதில் என்ன இருக்கிறது?

பார்ப்பான் புளுகுக்கதைகள், அரசியல் பொருளாதார, சிங்கார வானநூல் புளுகுகள் இல்லாவிட்டால் இன்றைய எப்படிப்பட்ட தமிழ்ப்புலவனுக்கும் பிழைக்க வழி ஏது? பார்ப்பான் சரக்கு இல்லாவிட்டால் தமிழ்ப்புலவர்கள் பட்டினி கிடக்க வேண்டியது தானே? தமிழனுக்குக் காலம் கிடையாது; ஒன்று பார்ப்பானுடையது அல்லது ஆங்கிலேய னுடையதுதான் பயன்படுகிறது.

இன்னும் இதுபோன்ற தமிழ், தமிழ்மொழியின் தன்மையை எடுத்துச் சொல்ல மிக வெட்கப்பட வேண்டியிருக்கிறது. பார்ப்பான் சிரிப்பானே என்று பயப்பட வேண்டியிருக்கிறது.

நிற்க, நம் எதிர்கால வாழ்வுக்கு இன்று நாம் எதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கொறோம்?

சர்வத்தையும் விஞ்ஞானமயமாக மேல் நாட்டு முறைகளைக்கொண்டு ஆக்கி சர்வத்திலும் மேல் நாட்டானைப் (புதிய முறைகளை) பின்பற்றி வளர்ச்சி அடையவே முயற்சிக்கிறோம். திட்டம் போடுகிறோம். இந்தக் காரியங்களுக்குத் தமிழர் முத்தமிழ் - சங்கத் தமிழ்களையே நம்பி என்ன காரியத்திற்கு, ஆங்கிலக்கருத்தோ, இங்கிலீஷ் சொல்லோ ஆங்கிலேயனிடம் பயிற்சியோ இல்லாமல் இங்கிலீஷை பகிஷ்கரித்துவிட்டு, என்ன சாதித்துக் கொள்ள முடியும்?

சாதாரணமாகப் பிராயாணத்திற்குப் பயன்படும் ரயில், கார், பஸ், லாரி, சைக்கிள் என்ற பெயர்களை எதற்காக மாற்ற வேண்டும்? எஞ்சின், டிராக்டர், புல்டோசர் இவைகளுக்குப் பெயர் மாற்ற ஏன் பாடுபட வேண்டும்? இந்தியாவில் உள்ள பல நூற்றுக்கணக்கான மொழி பேசும் மக்களுக்கும் இந்தப் பெயர்களை அப்படியே தான் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

பொதுவாக நான் சொல்லுவேன். இன்று நாம் வாழும் தமிழ்நாடு நம் பழமை பழங்காலத் தமிழ்நாடு அல்ல. அதாவது ஆங்கிலேயனோ, துருக்கனோ வருவற்கு முன்பு இருந்த மூவேந்தர் காலத் தமிழ்நாடல்ல.

நாம் வேறு நாட்டுக்குக் குடியேறா விட்டாலும் வேறு நாட்டு நாகரீகம், கலாச்சாரம், செயல்முறை, வாழ்க்கைமுறை, தொழில்முறை நம் நாட்டில் புகுந்து நம்மை ஆட்கொண்டு விட்டது. அதனால்தான் நான் இன்று முழங்காலுக்குக் கீழ் மறையும்படி வேட்டி கட்டவும்,

'கிராமணியார்கள்' தெருவில் நடக்கவும், நாங்கள் இருவரும் இவ்வளவு பேசவும் தெரியவும் முடிந்தது.

தாய் (இன்னது) மொழி என்பதற்கும், பிறவி (இன்னது) ஜாதி என்பதற்கும், பிறவி மதம் (இன்ன மதம்) என்பதற்கும் என்ன குறிப்பு (மெய் ஆதாரம்) காண முடிகிறது? இவை எப்படி வந்து நம்மைப் பற்றியதோ அப்படித்தானே தாய்மொழியும் மதமும் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கிறது?

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலவே" (கூடாதது அல்லவே)

கால வகையினானே என்றால் இயற்கை அமைப்பினாலே என்பதுதானே தத்துவப் பொருளாகும்? உண்மையாய் நம்மைப் பெற்ற தாய் தகப்பன் பெயரே நாம் வேறு ஒருவருக்குத் தத்துப் போனவுடனே மாறிவிடுகிறதா இல்லையா? நாமும் தத்து எடுத்த தாய் தகப்பன் பெயரையே நம் தாய் தகப்பன் பெயராகச் சொல்லுகிறோமா இல்லையா? அது மாத்திரமல்ல 'திதி' செய்தாலும் தத்து தாய் தகப்பன்மார் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் அந்தத் 'திதியின் பயன் அவர்களைச் சேர்ந்து விடுகிறது' செய்யாவிட்டால் 'பாபம் வந்து சேருகிறது' என்று கூறவதற்கில்லை?

'கருப்பாயி' வயிற்றில் பிறந்த பையனானாலும் அது வெள்ளைக்காரனுக்குப் பிறந்தால் அல்லது வெள்ளையன் எடுத்து வளர்த்தாலும் அவனுக்கு இங்கிலீஷ் தானே தாய்மொழியாகும்? இந்தியாவில் சினை ஆகி இங்கிலாந்தில் பிள்ளை பெற்று, அந்தப்பிள்ளை அங்கு அந்நாட்டு குடிமகனாகப் பதிந்து கொண்டால் அவனுக்கு இங்கிலாந்து தானே தாய்நாடு! அந்தக்குழந்தையைப் பிரஞ்சுக்காரன் கொண்டு போய் வளர்த்தால் பிரஞ்சுதானே தாய்மொழி?

இந்து மதக்காரன் தாய் தகப்பனுக்கு சினையாகி ஆஸ்பத்திரியில் பெற்று, அங்கேயே அக்குழந்தையை விட்டுவிட்டுத் தாய் தகப்பன்மார் போய்விடுவார்களேயானால் அதை ஒரு முகம்மதிய நர்சு எடுத்துபோய் வளர்த்தால் அது இஸ்லாம் மதமாகி விடுகிறது; கிறிஸ்த்துவ நர்சு எடுத்துபோய் வளர்த்தால் அக்குழந்தை கிறிஸ்த்துவ மதமாகி விடுகிறது

இப்படியாக சாதி உணர்ச்சி, மொழி உணர்ச்சி, மத உணர்ச்சி, சூழ்நிலைக்கேற்ப ஏற்படுகிறது. இதற்காக ஒருவர் நான் உயிர் விடுவேன்; சிறை செல்வேன்; கருப்புக்கொடி பிடிப்பேன் என்றால் அது எப்படி ஜாதி, மத, மொழிக்காக இருக்க முடியும்? பிழைப்புக்காக இருக்கலாம்; பிழைக்க வேறு வழி இருந்தால், வேறுபதவிக்காக, விளம்பரத்திற்கு ஆக வியாபாரத்திற்காக இருக்கலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

ஏனென்றால் ஜாதி, மதம், மொழி ஆகியவைகள் ஒரு மனிதனுக்கு இயற்கை யானவை அல்ல, இவை செயற்கையானவை. காலதேச வர்த்தமானத்தினால் ஒரு மனிதனை வந்து அடைபவை. அல்லது மனிதனின் வசதிக்கு தக்கபடி ஏற்படத்தக்கவை.

உணவுப் பழக்கம் போலும், கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனும், ஏன்? காதலிக்குக் காதலனும், காதலனுக்கு காதலியும் அமைவது நற்சம்பவமாய் அமைபவை. மற்றும் எஜமானுக்கு அடிமையும், அடிமைக்கு எஜமானும் அமைவது போல் அமைபவையே அல்லாமல் எது நிரந்தரம்? எது மாற்றக் கூடாதது, எது மாற்ற முடியாதது?

விளக்கம் நீண்டு விட்டது என்று கருது கிறேன். மொழி பக்தர்களுக்கு (வெறியர்களுக்கு) ஒரு விண்ணப்பம், பக்தியின் பேரால் அறிவு வளர்ச்சியை, நாட்டு வளர்ச்சியை பாழடித்து விடாதீர்! உடை விஷயத்தில் நாம் காட்டு மிராண்டிகளானதே போதுமானது. (1967)

### தொல்லைக்கா மொழி

மொழித்தொல்லை இந்திய தேசம் முழுவதிலும் பல நாடுகளுக்குச் சேர்ந்து ஒரே ஆட்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் இயற்கையாக ஏற்பட்ட தொல்லை அல்ல என்றே சொல்லலாம்.

வெள்ளையர் ஆட்சி காலத்தில் மொழித் தொல்லை இல்லை என்று சொல்லப்படுமானால் அவன் ஒரு மொழியை ஆட்சிக்காகப் பொது மொழியாக்கி வைத்துவிட்டான். ஆதலால் மொழித் தொல்லைக்கு இடமில்லாமல் போய்விட்டது.

அந்த மொழி வெள்ளையனுடைய சொந்த மொழியாக இருந்தாலும், இந்திய மக்கள் அதை விரும்பி மேல் விழுந்து கற்கவும், பயன்படுத்திக் கொள்ளவும் போட்டி போட ஆரம்பித்ததால், அம்மொழியினால் மக்கள் நன்மை அடைந் தார்கள் என்பதைத் தவிர, சிறிதும் தொல்லை அடையவில்லை.

பொதுவாக இந்தியாவில் உள்ள மக்கள் 100க்கு 99 பேர் மூடநம்பிக்கைகாரர்களாய், முட்டாள்களாய் இருப்பற்கே காரணம் அவரவர்கள் மொழியேயாகும் என்பது எனது பலமான கருத்து. நம் மனிதருக்கு இதுவரை

படிப்பு இல்லை என்பது ஒரு காரணமானாலும் அவரவர் பேசும் மொழியிலாவது அறிவிற்கான சொற்கள் இருக்கிறதா என்றால் கிடையாது. படிப்பதாக இருந்தாலும் அறிவிற்கான நூல்கள், இலக்கியங்கள், மதசம்பிரதாய ஆதாரங்கள் எதுவுமே கிடையாது! பிறந்த குழந்தை பேச வேண்டுமானாலே தாய் தந்தையர் கற்றுக் கொடுத்துத்தானெ ஆக வேண்டும்!

சர்.இராதகிருஷ்ணன், சர்.சி.வி. இராமன் ஆகிய படித்த பெரியோர்களைப் பார்த்தாலே சாதி உணர்ச்சி எவ்வளவு தூரம் பகுத்தறிவை கெடுத்து விடுகிறது என்பது தெரியும்.

இப்படியாக இந்தத் தன்மையில் உள்ள மொழிகளை இந்த முறையில் புகுத்தப்பட்டு வந்தால் மனிதனுக்கு மொழியினால் அறிவு எப்படி வளர முடியும்? புதிய உலகில் வாழ்கின்ற வாழ வேண்டிய மக்களுக்கு மொழிப்பைத்தியம் எதற்கு? அதுவும் சாதி போன்ற, மதம் போன்ற மொழிப்பைத்தியம், மொழிவெறி என்பது எதற்காக இருக்க வேண்டும்?

போதாக்குறைக்கு ‘பெரியார் கல்லூரியில் படித்தவர்கள்’ என்றும், நாங்கள் ‘பகுத்தறிவுவாதிகள்’ என்றும் சொல்லிக் கொள்ளும் இன்றைய மந்திரிகள் “தமிழுக்கு, தமிழ் மொழிக்குக்கேடு வந்தால் நாங்கள் பதவியை விட்டு வெளியேறிவிடுவோம்.” என்று சொல்லுகிறார்கள் என்றால் இதில் என்ன பகுத்தறிவு இருக்கிறது? என்ன ‘பெரியார் வாசனை’ இருக்கிறது? உயர்தரப் படிப்பு களையெல்லாம், கல்லூரியிலும் கூட தமிழிலே ஆக்குகிறோம் என்றால் மக்களை முட்டாளாக்கு கிறோம் என்றுதானே பொருள்?

இப்படியான நிலை ஏற்பட்டால் இது முக்கொலை என்றுதானே ஆகும்? தமிழ்மொழியும் கெட்டு, பாடவிஷயமும் பொருளும் கெட்டு, ஆங்கிலமும் கெடும்படி அதலால் மூன்று கொலை செய்ததாகத்தானே முடியும்? இதுதானா இந்தச் சிப்பாய்கள் வேலை? இந்த நாடு முன்னேற வேண்டுமானால், எந்த மொழியானாலும் சரி, விஞ்ஞான அறிவு, விஞ்ஞான வாழ்வு இவற்றால்தான் முடியும்!

(விடுதலை 05-04-1967)



16.2.69
விடுதலை

“நான் கீழ் ஜாதி என்பதை எப்படி ஒப்புக் கொள்வதில்லையோ அப்படித் தான் குடிகாரன் குற்றவாளி என்பதையும் மனைவி தவிர மற்ற பெண்களுடன் காதல் நடத்துபவன் குற்றவாளி என்பதையும் ஒப்புக்கொள்வதில்லை”.

9 ஆம் பக்க தொடர்ச்சி

1. ஐ.டி. கம்பெனிகள் இந்தியாவில் ஒப்பந்தம்,

2. இராஜிவ்காந்தி காலம், 3. மற்ற நாடுகளில் எஞ்ஜினியர்கள் எண்ணிக்கை இந்தியாவுடன் ஒப்பிடும் போது ஏன் குறைவு?, 4.ஒப்பந்தத் திற்குப் பின் மாறிய பாடத்திட்டங்கள்

இந்தச் செய்திகளை மாணவர்கள் படித்துப் புரிந்து செயல்பட்டால் இனியாவது உருப்பட வாய்ப்பு இருக்கிறது.

இரண்டாவதாக இதற்கு சிவகாசி, திருப்பூர், மற்றும் chemical, biotechnology, & petroleum engineering துறைகளில் கவனம் செலுத்தி யிருந்தால் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை விளக்கியதில் தெளிவு பிறக்கிறது மாணவர்களுக்கு. அடுத்து sex education தற்போது தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் பரவலாக பேசப்படும் தலைப்பு ‘பாலியல் கொடுமை’ இது ஓர் சமுக பிரச்சணையாக உருவெடுத்திருக்கிறது.

கல்வி, சமூகப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான போர்வாள். ஆக பாலியல் சம்மந்தப்பட்ட செய்திகளை மாணவர்களுக்கு பாடமாகக் கற்றுத்தந்து விளக்குவது ஒன்றே தீர்வாக இருக்க முடியும் என்பதைக் கூறியிருப்பது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களும் விழிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்.

கல்வி ஒடுக்கப்பட்டவருக்கான விடுதலை என்று பாவ்லே பிரையர் பற்றி முதன் முறையாக காட்டாறு இதழில் படிக்கிறேன். அவர் கல்வியைப் பற்றிக் கூறியிருப்பதும்; ஆசிரியர்-மாணவர் உறவுமுறையும் சிந்திக்க வைக்கிறது.

கல்வி நம்மை நவீன மனிதர்களாக மாற்ற வேண்டும். ஆனால் அது அவ்வாறு செய்யாமல் நம்மை ATM மிஷன்களாக மாற்றுகிறது. என்ற கருத்து பணத்தை மட்டுமே குறிவைத்துப் படித்து வேலைக்குச் செல்லும் (Robo) இயந்திர மனிதர்களுக்கான அடி. பாவ்லே பிரையர் எழுதிய நூல்களை வரிசைபடுத்தியிருப்பது எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

போர்வாளைப் பயன்படுத்தும் போராளிகளான ஆசிரியர்களே சரியில்லை என்று விமர்சனம் மட்டும் செய்யாமல் கல்வியை எப்படிப் பகுத்துக் கற்றுத்தர வேண்டும் என்று கூறியிருப்பதும் பயனுள்ளதாக இருக்கும். தற்போது இதைப் படித்துத் தெளிவுபெற்று எதிர்காலத்தில் பின்பற்றினால்.

- கிருபா நந்தினி

## சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

# பகல் கனவு



அரசூர் அ.ப.சிவா

11

அன்னிக்கு செவ்வாய்க்கிழமை. காலையிலேயே கல் வரலை, மணல் வரலை, மாத்தி மாத்தி அழைப்பு வந்து கொண்டிருக்கும் காலை வேளை, அட உனக்கெல்லாம் நாட்டுப் பற்றே கிடையாதா? எனக் கோபமாய் கேட்டவாறே வந்தான் நண்பன் சமூக சேவகன் .என்ன நாத்து பத்து என்றேன்.

காலையிலே உங்கூட சண்டை போட முடியாது உன்னோட கருப்பு சட்டை ஒன்னு கொடு போட்டுக்க வேணும் என்றான், ஏண்டா மலைக்கு மாலை போடப் போறியா?? சீசன் எதுமில்லையே என்ற என்னை முறைத்தவாறே, அம்மா கிட்ட சொல்லி கருப்புச்சட்டையை வாங்கி போட்டுட்டு கலாம் இறந்துட்டாரு இவன் வேலை பார்த்துட்டு திரியுறான் பாரு என கத்தியவாறே போயிட்டான்.

சரிடா? நாளனைக்கு வா என்ற என் வேண்டுகோளைக் காதில் வாங்கிய மாதிரி தெரியல .

இரண்டு நாள் கழித்து விடுமுறை நாள், கலாமின் இறுதி நிகழ்வு நேரலையில் ஓடிக் கொண்டிருக்கும் போது வந்துட்டான் சமூக சேவகன் இனி இந்தியாவோட எதிர்காலத்தை நினைச்சாலே பயமா இருக்குது, கலாம் இல்லாமல் இளைஞர்கள், மாணவர்களுக்கு அறிவுரை கூற இனி யார் இருக்காங்க இப்படியா புலம்பித் தீர்த்தான் சமூக சேவகன்

டேய் போதும் நிறுத்துடா இரண்டு நாளா எங்க போனாலும் இதே வம்பாப்போச்சு எந்த விசயத்தையும் உணர்வுப்பூர்வமா அனுகாம அறிவுப்பூர்வமா அணுகனும், அப்துல்கலாம் அய்யாவுக்கு அஞ்சலி செலுத்துறேன் பேர்வழி என்ற பெயரில் அவரு சொன்னதுக்கு எதிராவே நடந்துக்கிறீங்க என்றேன், அப்படி அவரு என்ன சொன்னாரு அப்படினான் சமூக சேவகன், நான் இறந்துவிட்டால் அன்று விடுமுறை விடாமல் கூடுதல் நேரம் வேலை செய்ய சொன்னராம்!! நீங்க என்னடான்னா லீவு விட்டுட்டு திரியுறீங்க .

உங்க வீட்டில் அப்பாவோ அம்மாவோ செத்து கிடந்தா அறிவுப்பூர்வமாவா அணுகுவ என்றான் அவன், ஆம் நான் மட்டுமல்ல நீயும் ஏன் எல்லோரும் தான், ஒரு வேளையோ இரண்டு வேளையோ சாப்பிடாம அடுத்த வேளை சோறு திங்கறதில் ஆரம்பித்து அவங்களுக்கு இறப்பு சான்றிதழ் வாங்குகிற அனைத்தும் அறிவுப் பூர்வமான செயல்தான் .

சரி உங்க அப்துல்கலாம் அய்யா தாய் மொழி வழியில் ஆரம்பக் கல்வி பயின்றதால் தான் விஞ்ஞானி ஆனாதா சொன்னாரே, உன் பையனை ஏன் ஒரு லட்சம் பீசு கட்டி பெரிய பணக்கராங்க படிக்கற பள்ளிகூடத்தில சேர்த்துன என்றேன், அதற்கு பதிலே இல்லை அவனிடம், இதுக்கு மட்டுமல்ல இன்னும் நிறையக்கேள்விகளுக்கு உங்க கிட்ட பதிலே இல்லை ஏன்னென்றால் உங்களுக்கு அஜித், விஜய் எப்படியோ அது மாதிரிதான் அப்துல்கலாமும் என்றேன் .

என்னடா சும்மா பேசிட்டே போற அப்ப எங்க கலாம் அய்யா என்ன அவங்க மாதிரி நடிகரா?? என்றான், உறுதியா சொல்ல முடியாது ஆனா இல்லையின்னு சொல்ல முடியாது?? என்றேன் அய்யோ கொழப்பாதீடா?? இது ச.சேவகன், சரி கொஞ்சம் புரியுற மாதிரியே சொல்றேன் கேட்டுக்கோ .

நாட்டுல அறிவாளிகள் இரண்டு வகையினர் ஒன்னு மக்களுக்கானவர்கள் மற்றொரு வகையினர் ஆளும் வர்க்கத்துக்கும் முதலாளிகளுக்குமானவர்கள் இதுல உங்க அய்யா அப்துல்கலாம் இரண்டாம் வகை என்றேன்

கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுடா??

என்றான் ச.சேவகன், அதாவது அப்துல் கலாம் சொல்லறதோட சரி அவரு உங்க கிட்ட என்ன சொன்னாரு கனவு காணச்சொன்னாரு, கனவு கண்டீங்களா, அதனால் கண்ட பயன் என்ன??

2020ல் இந்தியா வல்லரசு ஆக கனவு கண்டீங்களே கலாம்தாசா வல்லரசு அப்படினா என்ன உனக்கு தெரியுமா?

ஓ தெரியுமே .. அதுக்குத்தான் எங்காளு பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தினார், அப்பத்தானே எதிரி நாடுகெல்லாம் நம்மளப்பாத்து பயப்படும் அதுதான் வல்லரசு .

அட வெங்காயங்களா உங்காளு அணுகுண்டு சோதனை நடத்தின பின்னாடி துக்குனுண்டு நாடு இலங்கை கிட்டத்தட்ட 600 மேற்பட்ட இந்திய மீனவர்களை நடுக்கடலில் குருவி மாதிரி சுட்டுத்தள்ளிட்டு போயிட்டனுக இது உங்காளு நாட்டோட முதல் குடிமகனா இருந்த 5 வருடத்திலும் நடந்தது, சொந்த நாட்டு, சொந்த மாநிலத்து, அவ்வளவு ஏன் உங்க ஏவுகணை நாயகன்..சொந்த ஊரு மீனவர் களுக்காக ஒரு தடவை கூட குரல் கொடுக்கலை அப்படிங்கறது கசப்பான உண்மை. முதல்ல வல்லரசுன்னா என்ன தெரியுமா?? எந்த ஒரு நாடு தன் குடிமக்களின் அனைத்து தேவைகளுக்கும் அடுத்தவன் கிட்ட கைநீட்டி நிக்காமல் தானே செய்யுதோ அதுவே வல்லரசு, இங்க ஆரம்ப பள்ளிக்கூடத்துக்கு கக்கூஸ் கட்டறதுக்கு கூட உலக வங்கி கிட்ட கடன் வாங்க வேண்டியிருக்கு .

அப்புறம் அவரு தாய்மொழி வழியில ஆரம்பப்பள்ளி அறிவியலை படிச்சதால தான் விஞ்ஞானியா வந்ததா சொல்லிட்டே இருந்தாரு, ஆனா தாய் மொழி வழிக் கல்விக்கு அவரு செஞ்சது என்ன?? இப்ப பாரு நீ கூட அப்துல் கலாம் வந்துட்டுப் போன பள்ளிக் கூடமுன்னு ஒரு லட்சம் கட்டி உன் பையனை இங்கிலீசு மீடியத்தில படிக்க வைக்கிற, அப்ப உங்காளு சொல்றத நீயே கடை பிடிக்கல

இணையத்தில் வந்த செய்தி ஒன்னு பாரு ..இதய நோயாளிகளின் சிகிச்சையில் பயன்படுத்தப்படும், ஸ்டென்ட்கள் வெளிச் சந்தையில், 40 ஆயிரம் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில், வெறும் 7,000 ரூபாய்க்கு, கலாம் - ராஜு ஸ்டென்ட் கிடைத்ததால், ஏழை நோயாளிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது. குறிப்பாக, அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு, கலாமின் இந்த கண்டுபிடிப்பு மிகவும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வெளிச் சந்தையில் விற்பனை செய்யப்படும், இறக்குமதி செய்யப்பட்ட ஸ்டென்ட்களின் மூலம், அதை பரிந்துரைக்கும் டாக்டர்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் கமிஷன் தொகை அதிகம் கிடைக்கிறது.

ஆக அவரோட கண்டுபிடிப்பான மலிவு விலை இருதய வால்வு, மற்றும் மலிவு விலை மருந்து எளிய மக்களுக்குக் கிடைக்க அவரின் நடவடிக்கைகள் என்ன??? ஒரு வேளை அவரு தாய் மொழிவழிப்பள்ளிக்கு ஆதரவாவோ, எளிய மக்களுக்கு முழுசா இருதய வால்வு கிடைக்கவோ வேலை செஞ்சிருந்தாவே பல கார்ப்பரேட் முதலாளிகளுக்கு எதிரி ஆயிருப்பாரு..

மற்றபடி உங்காளு கண்டுபிடிச்சதெல்லாம் நேரடியாக மக்களுக்கு உதவாததை தான், வேற ஏதாவது இருந்தா நீயே சொல்லு என்றேன்

அதெல்லாம் இங்குள்ள ஊழல் அரசியல் வாதிகள் செய்த வேலை, அதுக்கு கலாம் என்ன செய்வாரு. அட ஆமா இன்னென்னு கேட்க மறந்துட்டேன் ஊழலுக்கு எதிரா உங்காளு நடத்திய போராட்டங்கள் என்ன???

அப்புறம் இன்னொரு முக்கியமான மேட்டரு , நான் சிவில் இஞ்சினியர் இப்ப நான் ஒரு சி.என்.சி மிசினை பாத்துட்டு அதனோட தரத்தைச் சொன்னா மெக்கானிக்கல் இஞ்சினியரான நீ ஒத்துக்கொள்வாயா?? என்றேன்.. அட அதெப்படி முடியும் ?? உன் துறை என்ன?? எங்க வேலையை பத்தி உனக்கென்ன தெரியும் கோபமாய் கேட்டான் ச.சேகவன்,

அப்படி வாடா வழிக்கு கலாம்தாசா உங்களு ஏவுகணை விஞ்ஞானி( ROCKET SCIENTIST) அணு உலையை பற்றி சொல்லலாம் நான் சொல்லக் கூடாதா??

கூடங்குளம் அணு உலையில் 30 நிமிடத்தில் ஆய்வு செஞ்சு சொன்னாரு உங்காளு அணு உலை பாதுகாப்பா இருக்குதுன்னு அடுத்த நாளே வால்வு பழுது . அரசு தான் நினைப்பதை மக்களுக்கு சொல்வதற்கு இவரை பயன்படுத்திக் கொண்டது .

அவ்வளவு ஏன் உங்காளு ஜோதிடத்தைப் பற்றி சொன்னது தெரியுமா???? பாரு

நமது சூரிய மண்டலத்தில் நம்மை விட்டு வெகு தொலைவில் உள்ள கோள்களுக்கு நமது மக்கள் இந்த அளவுக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததன் பின்னணியில் உள்ள காரணத்தை உண்மையில் என்னால் எப்போதுமே புரிந்து கொள்ள முடியவில்லை; ஜோதிடம் அறிவியல் என்ற போர்வையில் ஏற்றுக் கொள்ளப்படு வதற்கு நான் வருந்தவே செய்கிறேன்,

இந்தக் கோள்கள், நட்சத்திரக் கூட்டங்கள்,

ஆகியவை மனித உயிர்கள் மீது ஆற்றல் செலுத்த இயலுமென்ற கட்டுக்கதைகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதை நானறியேன். விண்வெளியில் உள்ள இவற்றின் சரியான இயக்கத்தைச் சுற்றி, குழப்பம் மிகுந்த கணக்குகளை கற்பனையில் உருவாக்கி அவற்றிலிருந்து மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் பற்றிய முடிவுகளைப் பெறுவது என்பது சரியானதென எனக்குத் தோன்றவில்லை!

-அப்துல்கலாம்

ஜோதிடத்துக்கு எதிராக இவ்வளவு மழுப்பலா கருத்து சொல்ற உங்க ஆளுக்கு (நமது சூரிய மண்டலத்தில் நம்மை விட்டு வெகு தொலைவில் உள்ள கோள்களுக்கு நமது மக்கள் இந்த அளவுக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததன் பின்னணியில் உள்ள காரணத்தை உண்மையில் என்னால் எப்போதுமே புரிந்து கொள்ள முடியவில்லை ) அதற்கு காரணம் மதம் சார்ந்த நம்பிக்கைகள் தான் வெளிப்படையாக சொல்லத் தைரியம் இல்லையா அல்லது தோணலையா???

உங்களுக்கு இதேதான் வேலை எப்ப பார்த்தாலும் மக்கள் மனம் புண்படும் மாதிரி பேசறது, கலாம்அப்படி இல்லை என இடைமறித்தான் சமூக சேவகன் .

அடடா நாட்டுல இந்த புண்படுகிற பிரச்சனையே மனசு புண்படுவது தான், நல்லா கேட்டுக்கடா நண்பா புண்படாமல் பண்பட முடியாது, குழந்தை கண்டிக்கும் தாய் அன்பில் கூட குழந்தையின் மனம் புண்படும் தெரியுமா???

மக்களின் நம்பிக்கைகளில் உள்ள தவறைச் சுட்டிக்காட்டி நல்வழிபடுத்தும் தலைவர்கள் அறிஞர்கள் வெகு மக்களிடம் நற்பெயரை பெறமுடியாது, இப்ப தெரியதா உங்காளு கலாம் ஏன் எல்லோரும் கொண்டாடுகிறார்கள் என்று ..

நான் கற்ற கல்வி என் மக்களுக்குப் பயன்படவில்லையென்றால் .

என்னை நானே சுட்டுக் கொல்வேன்- என்றார் அம்பேத்கர்

இவ்வரிகளுக்கு நேர் எதிராக நடந்தவர் உங்காளு.

ஒருவரின் நேர்மை என்பது இங்கு குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்காமல் இருப்பது என்றே புரிந்து கொள்ளப்பட்டு இருக்கிறது.

ஆனால் அது மட்டுமே போதாது ஒருவனின் நேர்மை என்பது அவன் எவ்வாறு சமூகத்துக்குப் பயன்படுகிறான் என்பதைப் பொருத்தே அமையும்

தான் சார்ந்த சிறுபான்மை மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துக்கொண்டுக்கிற, தான் சார்ந்திருக்கிற மதத்தின் வழிபாட்டுத் தலத்தை இடித்த, மத அடிப்படை வாதம் கொண்ட ஒரு அரசு, தான் சிறுபான்மை மக்களின் நண்பன் எனக் காட்டிக்கொள்ள தன்னைக் குடியரசு தலைவராக்க முயல்கிற வேளையில் அதன் சூட்சமத்தைப்புரியாமல் பதவியில் அமர்கிறார் என்றால் பாருங்கள் உங்காளு நேர்மையை.


இதுல நீங்கெல்லாம் எங்காளு ஜனாதிபதி ஆயிட்டார் எனப்பெருமை பீத்திக்கொண்டி ருந்தீர்களே?? ஜனாதிபதி பதவி வெறும் இரப்பர் ஸ்டாம்பு என்பது உங்களுக்குத் தெரியாதா???... நல்ல வேலைக்காரனை வேலை செய்ய விடாமல் அவனுக்குச் சோறு போட்டுச் சோம்பேறி ஆக்குவது போல அறிவியல் கண்டுபிடிப்பு களுக்குப் பதிலாக உங்காளை குடியரசு, சுதந்திர நாட்களுக்கு உரை வாசிக்க விட்டு விட்டார்கள் தாமரை கட்சிக் காரர்கள் .

சரி, இப்ப நீ என்ன சொல்ல வர்ற அப்துல் கலாம் மோசம் அப்படின்னு சொல்கிறாயா? என்றான்.

ஒரேடியா மோசமுன்னு சொல்ல முடியாது, ஆனா இனியாவது மக்களுக்காக இது போல விஞ்ஞானிகள் உழைக்க வேண்டும் என்பதே நம் விருப்பமாக இருக்க வேண்டும், கலாம் தான் வாழ்ந்த காலத்தில் மக்களுக்காக பேசி மட்டும் கொண்டிருந்ததை சில முயற்சிக் களை செயலாக்க முயன்றால் சரி தான். அத விட்டுட்டு கலாம் அய்யாவை நினைச்சுட்டு கலர் கலரா பகல் கனவு கண்டீங்கனா?? என்ன ஆகும் தெரியுமா??

என்னாகும் அதையும் நீயே சொல்லிடு என்றான் .

வேறொன்னும் இல்ல நீங்க பாட்டுக்கு வல்லரசு, வல்லரசுன்னு கனவு கண்டுட்டு கே டீவியில படத்த பார்த்துட்டு வல்லரசு விஜய காந்தை முதல்வராக்கிடாதிங்கப்பா நாடு தாங்காது



குடிஅரசு
3.10.1937

"பொதுவாக மது அருந்துவதையே குற்றமென்று சொல்லி விட முடியாது. கெடுதி உண்டாக்கும் படியானதும் பொருளா தாரத்திலும் அறிவியலிலும் கேடு விளைவிக்கும்படியானதுமான மதுபானமே இன்று விலக்கப்பட வேண்டியது ஆகும் அதைத் தான் நாம் மதுவிலக்கு என்பதே ஒழிய மதுவையே அடியோடு எப்போதும் யாரும் வெறுக்கவில்லை."

அதி அசுரன்



# மது Vs மனு

"இன்றைய மதுவிலக்கு ஒரு விஷநோய் பரவல் போன்ற பலன் தருகின்றது. அது தொற்று நோய் போலவும் கேடு செய்கின்றது. கடுகளவு உலகறிவு உள்ளவர் எவரும் மதுவிலக்கை ஆதரிக்கமாட்டார்கள் என்பது எனது கருத்து, முடிந்த முடிவு. இதை யார் சொல்கிறார் என்றால் மதுவிலக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டு இணையற்ற ஈடற்ற பிரச்சாரகர் என்று காந்தியாலும், இராஜாஜியாலும் பட்டம் பெற்று தனது நிலத்தில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தவன் ஆகிய இராமசாமி (நான்) சொல்கிறேன்.

தோழர் பெரியார் - விடுதலை 18.3.71

காந்தியவாதி சசிபெருமாள் அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து மதுவிலக்கு அரசியல் சூடுபிடிக்கத்தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டு அரசின் டாஸ்மாக் நிறுவனம் நடத்தும் மதுக்கடைகளில் விற்கப்படும் மதுவகைகள் தரமற்றவை. உடலுக்குப் பெரும் தீங்கு விளைவிக் கக்கூடியவை என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அப்படி உடலுக்குத் தீங்குவிளை விக்கக்கூடிய பொருள் மதுவாக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் அதன் விற்பனை தடைசெய்யப்படவேண்டும்.

ஒரே நிறுவனத்தின் பெயரில் ஒரே ப்ராண்டின் பெயரில் வெளிவரும் மதுவகையில் அது உற்பத்தி செய்யப்படும் மாநிலத்தைப் பொறுத்து தரம் வேறுபடுகிறது. எடுத்துக் காட்டாக Teachers என்ற விஸ்கி வகை. இந்த Teachers விஸ்கி பெரும்பாலும் எலைட் பார்களில் மட்டுமே கிடைக்கும் அதிகவிலை கொண்ட மதுவாகும். இது இந்தியாவில் பல மாநிலங்களில் தயாரிக்கப்படுகிறது. இதன் தமிழ்நாட்டுத் தயாரிப்பு பக்கா பட்டைச்சாராயம் போலவே இருக்கும். பஞ்சாப், கோவா, புதுடில்லி ஆகிய மாநிலங்களில் தயாரிக்கப்படும் இதேவகை விஸ்கி மிகவும் தரமானதாக இருக்கும். இராணுவ வீரர்கள் பயன்படுத்துவதற்குத் தயாரிக்கப்படும் இதே வகை மது மேலும் தரமானதாக இருக்கும். இவற்றை அளவாகக் குடிப்பவர்களுக்கு பெரியதீங்குகள் வராது.

டாஸ்மாக்கில் விற்கப்படும் எந்த ஒரு ப்ராண்டையும் இவ்வாறு ஆய்வுக்காகக் குடித்துப்பார்த்தால் மேற்கண்ட ஒரேவிடை தான் கிடைக்கும். எனவே இலாப வெறிகொண்டு 'குடி' மக்களுக்குத் தரமற்ற மதுவைத் தொடர்ந்து விற்பனை செய்துவரும் டாஸ்மாக் நிறுவனம் தண்டிக்கப்பட வேண்டும். தரமற்ற பொருட் களைத் தயாரித்த நெஸ்லே நிறுவனத்தின் 'மேகி' தடைசெய்யப்பட்டது போல டாஸ்மாக்கில் தற்போது விற்பனையில் உள்ள அனைத்து ப்ராண்டுகளும் தடைசெய்யப் படவேண்டும்.

அதேசமயம் 'குடி' மக்களுக்குத் தேவை யான அவர்களது அடிப்படை உரிமையான மது, தரமானதாக - பெரிய அளவில் தீங்கு விளை விக்காத தரத்தில்-தடையின்றிக் கிடைக்க வழிசெய்ய வேண்டும். டாஸ்மாக்கையே மூடவேண்டும், மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுக்குப் பின்னால் உள்ள அரசியலை விளக்க விரும்பவில்லை. ஆனால் குடிப்பழக்கம் என்பது ஒழுக்கக் கேடானது; மதுவிலக்கு உயர்வானது என்ற

**“மது அருந்துவது உணவைப் போல் மனித ஜீவ சுபாவம், மனித உரிமை என்றும் கூறலாம். வேத புராண தர்மங்களைப் பார்த்தால் விளங்கும். மதுவிலக்கு என்பது கொடுங்கோலாட்சியின் கொடுங் கோண்மையே ஆகும். பார்ப்பனர்கள் மாடு அறுக்கக் கூடாது, மாடு தின்னக் கூடாது என்று கூறுவ தற்கும் அரசாங்கம் மது அருந்தக் கூடாது, யோக்கியமான மது உற்பத்தி வியாபாரம் கூடாது என்பதற்கும் என்ன வேறுபாடு என்று கேட்கிறேன்.”**

**- தோழர் பெரியார் - விடுதலை - 9.11.68**

இந்துமதப் பொதுப்புத்தியைப் பற்றிப் பண்பாட்டுத்தளத்தில் விவாதிக்க வேண்டி யுள்ளது.

மது உடலுக்குக்கேடானது என்பதால் அதைத் தடைசெய்ய வேண்டும் என்பவர்கள், உடலுக்குக்கேடான அனைத்துப் பழக்க வழக்கங்களையும் தடைசெய்ய வேண்டுமெனக் கூறுவதில்லையே ஏன்? அவற்றை ஒழுக்கக் கேடான செயல் என்று சொல்வதோ, பரப்புரை செய்வதோ, நினைப்பதோகூட இல்லையே ஏன்? விரிவாகப் பார்ப்போம்.

உணவு வகைகளைச் சமைத்துச் சாப்பிடுவதால்தான் நோய்களே உண்டாகின்றன. காய் கறிகளையும், பழங்களையும் வேக வைக்காமல், நெருப்பில் வாட்டாமல்,சமைக் காமல் சாப்பிட்டு வந்தால் நோய்களே வராது என்று சில அமைப்புகள் பரப்புரை செய்தும் அவ்வாறே வாழ்ந்தும் வருகின்றனர். நெல்லை மாவட்டம் சிவசைலத்தில் இதற்கென ஒரு நிறுவனம் சிறப்பாக இயங்கி வருகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் அங்குசென்று இயற்கை உணவை உண்டு திரும்புகிறார்கள். நல்ல பயன் உள்ளது என்றும் சொல்கிறார்கள். நானும் அந்நிறுவனத்தில் தங்கி இயற்கை உணவை மட்டுமே சாப்பிட்டு சில நாட்கள் தங்கியும் இருக்கிறேன்.

நாம் கேட்பது என்னவென்றால் சமையல் முறை தவறு என்பது வேறு. சமையல் முறை ஒழுக்கக்கேடானது என்பது வேறு. சமையல்முறை தவறு என்று ஒருவேளை வெகுமக்கள் உணர்ந்து இயற்கைமுறைக்கு மாறும் காலமும் வரலாம். ஆனால் இந்த சமைத்துச் சாப்பிடும் முறை ஒழுக்கக்கேடானது என்று யாரும் கூறவில்லை.

இந்தியாவில் தற்போது எண்ணிக்கை அளவில் மிக அதிகமாக உயர்ந்து வரும் நோயாளிகள் நீரிழிவு நோயாளிகள் ஆவர். 2014 ஆம் ஆண்டு கணக்குப்படி ஏழு கோடிப்பேருக்கு சர்க்கரை நோய் இருக்கிறது. சுமார் 40 கோடிப்பேருக்கு அதன் அறிகுறிகள் இருக்கிறது என்கிறது சுகாதாரத்துறையின் கணக்கெடுப்பு. ஒவ்வொரு ஆண்டும் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது.

இந்த அளவுக்கு இந்த நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்ததற்குக் காரணம். நாம் சிறுதானிய உணவுகளைக் கைவிட்டு அரிசி உணவுக்கு மாறியதுதான் - காய்கறிகளைப் புறக்கணித்ததுதான் - உடலுழைப்பை மறந்ததுதான் என்று ஒரு பெரும் பரப்புரை நடந்து வருகிறது. மக்களும் இந்தப் பரப்புரையை நம்பி வேகமாக சிறுதானிய உணவுகளுக்கு மாறி வருகிறார்கள். அரிசியை முதன்மைப் படுத்திய உணவுமுறை உடலுக்குக் கேடானது என்று அனைவரும் கூறுகின்றனர். பரப்புகின்றனர். ஆனால் அரிசி உணவுமுறை ஒழுக்கக்கேடானது, பண்பாட்டுக்கு எதிரானது என்று எவரும் பேசியதில்லை.பேசப்போவதுமில்லை.

பண்டைக்காலத்திலிருந்து இயற்கை முறையில்தான் விவசாயத்தை மேற்கொண்டோம்.அந்த இயற்கை முறையி லிருந்து மாறி இரசாயன உரங்களையும், இரசாயனப் பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களால் உடலுக்குத் தீங்கு என்று கூறி ஒரு பரப்புரை நடக்கிறது. மக்களும் அதை ஏற்று வேகமாக இயற்கைமுறை விளைபொருட்களை வாங்கும் மனநிலைக்கு வந்துகொண்டிருக்கின்றனர். இயற்கை விவசாய முறையின் ஆதரவாளர்கள் எல்லோரும் தங்களது பரப்புரையில், செயற்கை முறை என்பது தவறானது, உடலுக்குத் தீங்கானது என்றுதான் பேசுகிறார்களே ஒழிய இரசாயன விவசாய முறை ஒழுக்கக்கேடானது, பண்பாட்டுக்கு எதிரானது என்று எவரும் எப்போதும் பேசியதில்லை.

பல நூற்றாண்டுகளாக, தொடர்ச்சியாக ஒரே ஜாதிக்குள் திருமணங்களை நடத்திக் கொண்டுவருகிறோம். இந்த ஒரே ஜாதித்திருமண முறையால் ஜாதி என்ற கொடிய நோய் மேலும் மேலும் உறுதிப்படுத்தப்பட்டு நாட்டின் முன்னேற்றம் பாழாகிறது. அதோடு மட்டுமில்லாமல் இப்படிப்பட்ட ஒரே ஜாதித்திருமணங்களால் நமக்கு 3000 வகையான நோய்கள் உருவாகியுள்ளன. மரபணு வழியாகத் தொடர்ந்து அவை நம்மைத் தாக்கி வருகின்றன. சர்க்கரை நோய், கொழுப்பு, கொலஸ்ட்ரால் போன்ற நாம் அதிகம் அறிந்த நோய்களே இதுபோன்ற ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங் களால் தலைமுறை தலைமுறையாக நம்மைப் பாதித்து வருகின்றன என்று மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்திவிட்டன.

உடலுக்குத் தீங்கானவற்றை எதிர்க்கிறோம் என்பவர்கள் முதற்கட்டமாகத் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேறு ஜாதியில் பெண் எடுக்கவோ, பெண் கொடுக்கவோ செய்வார்களா? செய்யாவிட்டாலும் பரவா யில்லை. இந்த ஒரேஜாதிக்குள் நடக்கும் திருமணமுறை உடலுக்குத் தீங்கானது என்று பரப்புரையாவது செய்வார்களா? அப்படிச் செய்பவர்கள்கூட இந்த ஒரே ஜாதித்திருமண முறை தவறு என்று சொல்வார்களே தவிர, ஒழுக்கக்கேடானது-பண்பாட்டுக்கு எதிரானது என்று சொல்ல மாட்டார்கள்.

இவை போல மதுவைவிடக் கொடியதான எண்ணற்ற பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் நாம் - உடலுக்கு மதுவைவிட மிக அதிகமாகத் தீங்குகளையும் நோய்களையும் ஏற்படுத்தும் பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள நாம் அவற்றைத் தவறு என்று தான் சொல்கிறோம். எப்போதும் ஒழுக்ககேடானது என்று சொல்வ தில்லை. நினைப்பதுமில்லை. ஆனால் மதுவை மட்டும், குடியை மட்டும் ஒழுக்கக் கேடாகப் பார்ப்பது ஏன்? அதுதான் இந்துமதப் பொதுப்புத்தி. இதில் எங்கே இந்து மதம் வருகிறது என்கிறீர்களா? மனுசாஸ்திரத்தைப் பார்ப்போம்.

**வேதமோதுவதாலும், மது, மாம்ச பக்ஷணஞ் செய்யாதிருக்கிற விரதாதிகளாலும், தேவ ரிஷி பிதுர்த் தர்ப்பணத்தாலும், பஞ்சமஹா யாகத்தாலும் சரீரமானது மோட்சத்துக்கு உரியதாகிறது. -அத்தியாயம்2. ஸ்லோகம் 28**

**சாராயம் என்பது கௌடி, பைஷ்டி, மாத்வி என மூவகைப்படும். இவற்றையெல்லாம் துவிஜாதிகள் (பிராமணர், சத்திரியர், வைசியர்) குடிக்கக் கூடாது. -அத்தியாயம் 11 ஸ்லோகம் 94**

**அநேகவிதமான கள்ளு, மாம்சம், மூன்று வித சாராயம் இவைகள் இராக்கதர், யாக்ஷர், பைசாசர், அசுரர் இவர்களின் உணவு. ஆதலால் தேவாந்தமான ஹவிசைப் புசிக்கிற பிராமணர்கள் இவற்றைப் புசிக்கக்கூடாது. இது பிராமண ஸ்பெண்களுக்கும் பொருந்தும். -அத்தியாயம் 11 ஸ்லோகம் 95**

மதுவையும், மாமிசத்தையும் தொடாமல் இருப்பவர்களுக்கு மோட்சத்தில் அதாவது சொர்க்கத்தில் இடம் கிடைக்குமாம். அதனால் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகிய மூன்று பிரிவினரும் மதுவை அருந்தக்கூடாது. இறைச்சி உணவுகளை உண்ணக்கூடாது என்கிறது மனு. மது என்பது அசுரர்களின் உணவு, சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்கள் என்ற ஒடுக்கப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உணவு என்று அறிவிக்கிறது மனுசாஸ்திரம். மனுவின் இந்தக் கட்டளையை மீறி சாராயத்தை, மதுவை அருந்தும் உயர்ந்த

**இந்து மதத்தில் இழிவைச் சுமந்து கொண்டு வாழும் நமக்கு, நாம் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வசிக்கும் இருப்பிடம், நமது பண்பாடு, ஒழுக்கம், நியாயம், குற்றம், தண்டனை, பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் நிர்ணயிப்பது இந்த மனுசாஸ்திரமே. இந்து மத சாஸ்திரங்களும், வேதங்களும் உருவாக்கி வைத்துள்ள பொதுப்புத்திதான் மது குடிப்பவன் ஒழுக்கக்கேடானவன் என்ற எண்ணம்.**

ஜாதிகளுக்கு என்ன தண்டனை என்பதையும் விளக்கியுள்ளது இந்துக்களின் சட்டநூலான மனு.

**துவிஜாதிகள் ( பிராமணர், சத்திரியர், வைசியர்) சாராயத்தைக் குடித்தால் அதற்குப் பிராயச்சித்தமாக அந்தச் சாராயத்தையே நெருப்பு நிறமாகக் காய்ச்சிக் குடிக்கக் கடவர். அதனால் அவனது உடல் வெந்து பரிசுத்தனா வான். -அத்தியாயம் 11 ஸ்லோகம்90**

**அல்லது நெருப்புநிறமாகக் காய்ச்சப்பட்ட பசுமூத்திரம், பசு நெய், பால், பசுவின் சாணம் இவற்றில் ஏதாவது ஒன்றைத் தான் இறக்கும் வரை ஒருதரமேனும், இரண்டு தரமேனும் சாப்பிட வேண்டும். -அத்தியாயம் 11 ஸ்லோகம்91**

மதுகுடிக்கும் உயர்ஜாதியினருக்கு மரணதண்டனையைப் பரிந்துரைக்கிறது மனுசாஸ்திரம்.

இந்து மதத்தில் இழிவைச் சுமந்து கொண்டு வாழும் நாம், உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வசிக்கும் இருப்பிடம், நமது பண்பாடு, ஒழுக்கம், நியாயம், குற்றம், தண்டனை, பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் நிர்ணயிப்பது இந்த மனு சாஸ்திரமே. இந்து மத சாஸ்திரங்களும், வேதங்களும் உருவாக்கி வைத்துள்ள பொதுப்புத்திதான் மது குடிப்பவன் ஒழுக்கக்கேடானவன் என்ற எண்ணம்.

உடலுக்குத் தீங்கான எதையும் நாம் யாரும் 'தவறு' அல்லது 'கேடு' என்று மட்டுமே சொல்கிறோம். 'ஒழுங்கீனம்' என்று சொல்வதில்லை. 'குடி'யை மட்டும் ஒழுக்கக் கேடு எனப் பார்ப்பது, நினைப்பது, சிந்திப்பது என்பது எந்த வகையில் நேர்மையான சிந்தனையாக இருக்கமுடியும்? இதைத்தான் தோழர் பெரியார் மிகச்சரியாக அணுகியிருக்கிறார்.

"மது அருந்துவது உணவைப் போல் மனித ஜீவ சுபாவம், மனித உரிமை என்றும் கூறலாம். வேத புராண தர்மங்களைப் பார்த்தால் விளங்கும். மதுவிலக்கு என்பது கொடுங்கோலாட்சியின் கொடுங் கோண்மையே ஆகும். பார்ப்பனர்கள் மாடு அறுக்கக் கூடாது, மாடு தின்னக் கூடாது என்று கூறுவ தற்கும் அரசாங்கம் மது அருந்தக்

கூடாது, யோக்கியமான மது உற்பத்தி வியாபாரம் கூடாது என்பதற்கும் என்ன வேறுபாடு என்று கேட்கிறேன்." - தோழர் பெரியார் - விடுதலை - 9.11.68

பழந்தமிழர் பண்பாட்டை விளக்கும் சங்கஇலக்கியங்களில்கூட குடிப் பழக்கம் ஒழுக்கக்கேடாகச் சித்தரிக்கப்படவில்லை. புறநானூறு, நற்றிணை, பட்டினப்பாலை போன்ற சில இலக்கியங்களில் அதற்கான சான்றுகளைப் பார்க்கமுடிகிறது. பட்டினப்பாலை என்ற நூலில் "பட்டு நீக்கி துகில் உடுத்தும், மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்" என்ற வரிகள் பெண்களும் 'கள்' உண்டு மகிழ்ந்திருந்த காலத்தைக் கண்முன் காட்டுகின்றன. டாஸ்மாக் வந்துதான் பெண்களையும் குடிக்க வைத்துவிட்டது என பண்பாட்டுக்கவலைகொள்பவர்கள் சங்க இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.

பெருமலை வாங்கமை பழுனிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையுங்கண்டே
என்ற நற்றிணைப் பாடலும்
'குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமை பழுனிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றிற் குரவையயரும்"

என்ற புறநானூற்றுப் பாடலும் பழந் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக குடித்து மகிழ்ந்துள்ளனர் என்று காட்டுகின்றன. பூக்கமழ் தேறல், மணங்கமழ் தேறல், தண்கமழ் தேறல் என்று பல வகையான மது வகைகளைக் குடும்பத்துடனும், உறவுகளுடனும் இணைந்து அருந்தி, ஆடிப்பாடி, குரவைக் கூத்தாடி மகிழ்ந்ததை நற்றிணையும், புறநானூறும் பதிவுசெய்துள்ளன.

'குடி' உரிமை பாதுகாக்கப்படவேண்டும். தீங்கான மதுவுக்குத் தடையும் வேண்டும். அதற்கு உரிய வழி 'கள்'. கள் ஒரு ஆரோக்கியமான உணவுப்பொருள். குடி மக்களுக்கு மிதமான போதையையும் வழங்கக்கூடியது. ஆனால் எந்தப் பொருளும் வணிகம் என்று வந்துவிட்டாலே அதில் கலப்படமும், தரக்குறைவும் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே தான் தோழர் பெரியார்கூட "மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லும் நான் பழையபடி கள்ளுக்கடையை திறக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆரம்பத்தில் சொன்னபடி தோப்பில் கள் விற்க வேண்டும். கள்ளை விஷமாக்கிவிடும் முறையை தடுத்துவிட வேண்டும். (மது ஆதரவாளர்களின் மாநாட்டில் - விடுதலை 1.2.1963)" என்று கூறினார்.

அரசே கள்ளுக்கடைகளை நடத்தினால் டாஸ்மாக்கில் நடந்தது போல தரமற்ற கள்

ஒரே ஜாதித்திருமணங்களால் நமக்கு 3000 வகையான நோய்கள் உருவாகியுள்ளன. மரபணு வழியாகத் தலைமுறை தலைமுறையாக நம்மைப் பாதித்து வருகின்றன. உடலுக்குத் தீங்கானவற்றை எதிர்க்கிறோம் என்பவர்கள் முதற்கட்டமாகத் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேறு ஜாதியில் பெண் எடுக்கவோ, பெண் கொடுக்கவோ செய்வார்களா? செய்யாவிட்டாலும் பரவாயில்லை. இந்த ஒரேஜாதிக்குள் நடக்கும் திருமணமுறை உடலுக்குத் தீங்கானது என்று பரப்புரையாவது செய்வார்களா?



விற்பனைதான் நடக்கும். அதற்காகத் தோப்புகளைத் தேடியும் அலையவும் முடியாது. தனியார் தோப்புகளிலும் கலப்படம் நடக்க வாய்ப்பு உள்ளது. குடி மக்களுக்கு நிரந்தரத் தீர்வு என்றால் வீட்டுக்கொரு தென்னை மரம் வளர்ப்போம்! மரத்திற்கொரு கள்ளுப்பானை வைப்போம்! வீடே இல்லாதவன் என்ன செய்வது என்ற கேள்வி வந்தால், மா, பலா, வாழைப்பழம், திராட்சை, நெல்லி போன்று அவ்வப்போது விலை குறைவாகக் கிடைக்கும் பழங்களைக் கொண்டு நாமே சொந்தமாக வீட்டிலேயே மது தயாரித்துப் பயன்படுத்திக்கொள்லாம் என்பதையே பதிலாகத் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

பழந்தமிழர் பண்பாடு என்ற பெயரில் மாடுகளோடு மோதிக்கொண்டிருப்பவர்களும் - பாவாடை, தாவணி, சேலை, வேட்டிகளுக்காகப் போராடுபவர்களும் - பெண்களுக்கு மட்டும் கற்பைப் போதிப்பவர்களும் - பூப்புனித நீராட்டு விழாக்களை நடத்திக் கொண்டிருப்பவர்களும் - ஜாதி கடந்த காதலை எதிர்ப்பவர்களும் அதே பழந்தமிழர் பண்பாடான 'குடி'யை மட்டும் எதிர்ப்பது ஏன்? மனுசாஸ்திரம் கண்ணை மறைக்கிறது.

"மனிதத் தன்மைக்கு மது அருந்துவது இழுக்கு என்று கருதக்கூடாது.... மது தடைப்படுத்தப்பட்ட நாடு அடிமை நாடேயாகும்." -தோழர் பெரியார்-விடுதலை 16.2.69

**நன்றி: சுகுணா திவாகர், வெ.பெருமாள்சாமி**

# மடத்துக்குளம் மோகன் நினைவுகளிலிருந்து

காஞ்சி சங்கராச்சாரியின் சனாதன தீண்டாமையை எதிர்த்து முழக்கம் இட்டோம். அப்போது மீண்டும் பரபரப்பு கூடுதலாக உண்டானது. அவைகளைத் தாண்டி கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்று அடைந்தோம்.

**செய்தியாளர்: காஞ்சி சங்கராச்சாரியின் – சனாதனக் கொள்கைக்கு எதிராக நீங்கள் முழக்கம் செய்தபின் – பெதப்பம்பட்டி கிராமத்தில் கூட்டம் எப்படி நடைபெற்றது?**

நாங்கள் வழக்கம் போல் வழிநடைப் பிரச்சாரம் நடைபெற்ற ஊர்களில் பெதப்பம் பட்டியில் நடைபெற்ற கூட்டம் எங்களுக்குக் கூடுதல் உற்சாகம் தந்தது. காரணம், வழக்கம் போல் கூட்டத்தில் பொள்ளாச்சி விஜயராகவன், இரா. மனோகரன், கி. பாரதி ஆகியோர் பார்ப்பனர் நம் இனத்திற்குக் காலம், காலமாகச் செய்த சூழ்ச்சி, வஞ்சகம் அதில் நம் தமிழ்நாட்டு 'தலைவர்கள்' தங்கள் சுயநலனுக்காகப் பதவி ஆசைக்காக, தாங்களே பார்ப்பன நயவஞ்சகத்தைத் தலைமீது தூக்கி வைத்துப் பார்ப்பன சுயநலனை எப்படி எல்லாம் பிரச்சாரம் செய்தனர் என மிகத் தெளிவாக மக்களிடம் விளக்கிப் பேசினார். மக்களும் மிகுந்த உற்சாகத் தோடு கேட்டுக் கை தட்டி ஆரவாரம் செய்தனர். நாங்களும் மிகுந்த உற்சாகம் அடைந்தோம். இப்படியாகக் கூட்டம் மிகச்சிறப்பாக நடந்து கொண்டு இருந்தது. பேச்சாளர்கள் பேசி முடித்தபின் இயக்கத்தின் மூத்ததோழர் புலவர் கடவுள் இல்லை, அவர்களும் நானும் மந்திரமா? தந்திரமா? நிகழ்சியைத் துவங்கினோம். ஆங்காங்கே நின்று வேடிக்கை பார்த்தவர்கள் மேடை அருகே வரத்துவங்கினார்கள்

**செய்தியாளர்: மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி எப்படி செய்கின்றீர்கள் உண்மையில் மந்திரம் செய்வீர்களா? சற்று விளக்கவும்.**

நம் மக்கள் 'சாமியார்கள்' தங்களின் 'தெய்வீக' சக்தி என்ற பெயரால், வெறும் கையில் திருநீர், குங்குமம் வரவைப்பது போன்ற நிகழ்ச்சியைச் செய்து ஏமாற்றுவார்கள். அதுபோல நாங்களும் செய்தோம். அதற்கு பக்தி எதுவும் தேவையில்லை. சில நுட்பங்கள் தெரிந்தால் போதும் என்பதை விளக்கினோம். கூட்டத்தில் வியப்பு, ஒரே சலசலப்பு உண்டானது. அந்தப் பொருட்களை கையில் வாங்கிக் கூட்டத்தில் இருந்தவர்கள், ஆண்கள், பெண்கள் அதை மிக பவ்யமாக நெற்றியில் வைத்தனர். அப்படி வைத்தவர்களின் அறியாமையைப் பார்த்து கூட்டத்திலிருந்த பலர் சிரித்து அவர்களுக்கு புரியவைத்தனர்.

மேலும் எலுமிச்சம்பழத்தை மக்கள் முன் அறுத்து காட்டிய போது அதில் இருந்து இரத்தம் (சிவப்புநிற திரவம்) வருவதாக நினைத்து பொதுமக்கள் மத்தியில் மிகவும் மயான அமைதி நிலவியது கூட்டத்தில் ஒரு விதமான பரபரப்பு நிலவியது. பொதுவாக பக்தியின் பெயரால் புத்தியை அடமானம் வைக்கும் நம் மக்கள், திருநீர், குங்குமம், எலுமிச்சம்பழத்தில் இரத்தம் என உணா௸ச்சிப்பூர்வமான நிகழ்ச்சியைப் பார்த்துத் தங்களையே மறந்த நிலையில் இருந்தனர் என்றுகூடச் சொல்லலாம்.

இந்த நிலையில் தோழர் விஜயராகவன் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், இது போன்ற நேரத்தில் கூட்டத்தில் துண்டு ஏந்தி கூட்டச்செலவைச் சரிசெய்ய மக்களிடம் செல்வது அவரின் வழக்கமான செயல். மக்களிடம் நல்ல வரவேற்பு - அன்றே சுமார் ரூ.600 க்கு மேல் வசூல் ஆனது. அப்போது தான் நினைத்தேன் 'கடவுள் இல்லை' 'இல்லவே இல்லை' கற்பித்தவன் முட்டாள் என அய்யாவின் இந்த தீர்க்கமான கொள்கைளை, பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பார்ப்பனியச்சதியை மக்கள் புரிந்து கொண்டனர் என்பதின் அடையாளம் தான் மக்கள் தந்த வசூல் என எனது எண்ணத்தில் ஒட்டிக் கொண்டு இருந்தது.

மக்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்ட தோழர் புலவர் கடவுள் இல்லை, கூட்டத்தில் போலிச்சாமியார்களுக்கு சவால்விட்டு நகைச்சுவையுடன் பேசினார். மக்களின் கைதட்டல் விசில் மிகுந்த உற்சாகத்தை தந்தது. நிகழ்ச்சியின் தொடராக அந்தப்பகுதியின் பெட்டிக்கடையில் வாங்கிய தேங்காய், முட்டை எனக் கூறி கையில் எடுத்து மக்களிடம் காட்டிய போது மேடையின் அருகே இருந்த அந்த கடைக்காரர், கடையின் முன்னே இருந்தவர்களிடம் "ஆமாப்பா இப்பதான் இதோ இவர்தான் (நான்) வாங்கினார்" எனக்கூறிக் கொண்டு இருந்தார். இதைக்கேட்ட நான் ஒலிப்பெருக்கியில் அதை அப்படியே கடைக்காரரைப்பார்த்து சொன்னேன். கூட்டம் கடைக்காரைப் பார்த்தது அவர் முகம் பிரகாசமாக இருந்தது* அவரும் ஆமோதித்தது போல் இருந்தார்.

தேங்காய் உடைத்ததும் தண்ணீர் வரும் என அனைவரும் எதிர்பார்த்த போது மல்லிகைப் பூ கொட்டியதைக் கண்ட மக்கள் பயங்கரமான விசில், கைதட்டல், கூட்டத்தில் முட்டையை என்ன பண்ணுவீர்கள் என ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு தோழர் புலவர் கடவுள் இல்லை - இதுபோல் எலுமிச்சம்பழம், தேங்காய், முடடை இவைகள் எல்லா வீடுகளிலும் பெரும்பாலும் கிடைக்கும் இதைத்தான் போலிச் சாமியார்கள் அல்லது மந்திரவாதிகள், குட்டிச்சாத்தான் வைத்துள்ளேன் எனக் கூறி மக்களை எப்படி பயமுறுத்தி பக்தியின் பெயரால் ஏமாற்றுகின்றனர் என்பதை விரிவாக தெளிவாக நகைச்சுவையுடன் விளக்கினார். பயம் தான் காரணம் எனவே, பக்தி வந்தால் புத்தி போய்விடும் என கூறினார்.

இப்படிச் சிறப்பாகக் கூட்டம் நடந்து கொண்டு இருந்தபோது கூட்டத்தில் ஒருவர் மிகச்சத்தமாக அதை எல்லாம் செய்கிறீர்களே கூடுவிட்டுக்கூடு பாய முடியுமா? என ஆவேசமாகக் கூச்சல் போட்டார். கூட்டத்தில் சற்று சலசலப்புகள் உண்டானது. நமது தோழர்கள் ஆவேசத்துடன் பரபரப்பாகினர். உடனே தோழர் புலவர் கடவுள் இல்லை ஒலி பெருக்கியில் அமைதி, அமைதி - இதுவரையில் கதைகளில், சினிமாவில் புராணக்கதைகளில்தான் கூடுவிட்டுக்கூடு பாய்வதை பார்த்து இருப்பீர்கள் ஆனால் ஒரு மனிதனின் உடலில் இருந்து நீங்கள் நினைக்கும் 'உயிர்' தனியே பிரித்து அடுத்தவர் உடலில் புகுந்து விடுவது, ஏன் சினிமாவில், புராணக் கட்டுக்கதைகள் போல் மனிதர்கள் அல்லது பிற பிராணிகளின் உடலில் புகுந்துவிட முடியாது என அறிவியல் செய்தியை விரிவாக சொன்னார்.

இருப்பினும், அதோ அந்த என் இன சகோதரன் பக்தியின், மதத்தின், கடவுளின் மீது கொண்ட நம்பிகையால் நம்மைப் பார்த்துக் கேட்ட அந்தக் கேள்வியை சாமியார், மந்திரவாதி என கூறிக்கொள்ளும் அந்த புரட்டுக்காரர்களிடம் கேட்கும் தைரியம் வருமா? என கேள்வியும் கேட்டுவிட்டுக் கூட்டத்தைப் பார்த்து நண்பா.. தோழரே... கூடு விட்டுக் கூடு பாய்வது போல் ஒரு நிகழ்ச்சியாக - இதோ நிற்கிறாரே எங்கள் தோழர் மோகன் அவரை நான் உங்கள் கண்முன்னே மறைத்துக் காட்டுகிறேன் என கூறினார். கூட்டம் மிகுந்த ஆரவாரம் செய்தது. என்னை மறைய வைக்கும் நிகழ்வுக்கான வேலை தொடங்கியது.

- தொடரும்..



“மதுவிலக்கை ஒழித்துவிட்டு மது ஆட்சி என்பதாக ஏற்பாடு செய்து மதுவினால் கேடில்லாமல் அதிக செலவில்லாமல் எவ்வளவு குடித்தாலும் அதனால் உடலுக்கும், புத்திக்கும், குடும்பத்திற்கும் கேடு வராமல் பாதுகாப்பளிக்கலாம். மது ஆட்சி என்பது கர்ப்ப ஆட்சி - பர்த் கன்ட்ரோல் என்பது போல் குடி ஆட்சி - டிரிங்க் கன்ட்ரோல் என்பதாக நடத்தலாம். இதனால் உடலுழைப்பாளிகள் நலம் பெறுவார்கள். பழைய கள், புளிச்ச கள் இருக்கவிடக்கூடாது. சுகாதார (நாணயமான) அதிகாரிகளை வைத்து மதுக்கடை மதுவை பரிட்சீத்து சோதனை செய்ய வேண்டும். சர்க்கார் அதில் அதிக வரும்படி எதிர்பார்க்கக்கூடாது என்பவைகளை கவனித்தால் மது மக்களுக்கு நன்மைபயப்பதாகலா”

(விடுதலை 29.11.62)

“தலைசிறந்த நாகரிக மக்கள் நாட்டில் மது அருந்துவது மற்றவர்கள் கவனிப்பே இல்லாத சர்வ சாதாரண அவசிய செய்கை யாக வழக்கமிருந்து வருகிறது. நமது நாட்டு ஜனநாயக ஓட்டு முறை, தேர்தல் முறை இருந்து வருகிற கூடாத காரியத்தை விட மது அருந்துவதும் அதன் பயனும் கேடான காரியமா என்று கேட்கிறேன்.”

(விடுதலை 9.11.68)

“100 ஆண்டு 75 ஆண்டுகளுக்கு முன்பு மது குற்றமற்ற ஒரு சாதனமாகத் தான் இருந்தது. அரசாங்கம் மதுவை அரசாங்க வியாபாரப் பொருளாக ஆக்கினதுடன் அரசாங்கமே மது வியாபாரம் செய்ய ஆரம்பித்த பிறகுதான், மது அருந்துவது (குடி) கெட்டது என்று சொல்லும்படி ஆகிவிட்டது. மது வியாபாரிகள் மதுவுக்குள் இயற்கை போதையைவிட அதிக போதை ஏற்படும் படியான பக்குவம் செய்ததால் மதுவால் கெடுதி என்று சொல்லும் படியான நிலை ஏற்பட்டுவிட்டது.”

(விடுதலை 9.11.68)

தோழர் மீனாமயில்

# ஆதிக்கத்தை நேசிக்கும் அடிமைச்சமூகம்

**தேவேந்திரர் தன்னார்வ அறக்கட்டளை, சுதேசி விழிப்புணர்வு இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து கடந்த 06.08.15 அன்று மதுரையில் ஒரு மாநாட்டை நடத்தியுள்ளன. இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம், "தேவேந்திரகுல வேளாளர் என்ற பெயரில் தங்கள் சமுதாயம் அழைக்கப்பட வேண்டும். எங்கள் சமுதாயத்துக்கு இடஒதுக்கீடு தேவையில்லை" என்பதாகும்.**

**இப்போது மட்டுமல்ல இந்த நோக்கத்தை முன்வைத்து கடந்தசில ஆண்டுகளாக தொடர்ந்து பரப்புரைகள் நடந்து வருகின்றன. இதே அறக்கட்டளை கடந்த ஆண்டு 28.10.2014 அன்று மத்திய அமைச்சரும் பா.ஜ.க முக்கியத் தலைவருமான பொன்.இராதாகிருட்டிணன் தலைமையில் ஒரு மாநாட்டை நடத்தி அதிலும் இதே தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். இந்தத் தீர்மானங்களைப் பற்றி, கடந்த 2011 ஆம் ஆண்டில் 'தலித்முரசு' ஏட்டில் தோழர் மீனாமயில் அவர்கள் எழுதிய ஆழமான கட்டுரை ஒன்றை அப்படியே வெளியிடுகிறோம்.**

*பரமக்குடி படுகொலையை முன்வைத்து சர்ச்சையொன்று கிளம்பியிருக்கிறது. ஒவ்வொரு முறையும் தலித் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்க்கப்படும் போதெல்லாம் இந்த சர்ச்சை கை கால்கள் முளைத்துக் கொண்டு அலைவது வழக்கம். குறிப்பாக, பட்டியல் சாதியினரில் ஒரு பிரிவினரான பள்ளர்கள், தங்களை தலித் என்று விளிப்போரை கடுமையாக சாடுவதோடு, தாங்கள் தலித்துகளே அல்லர் என்பதை நிறுவும் பொருட்டு புதிய புதிய விளக்கங்களையும் வரலாற்றுக் கதைகளையும் கூறுகின்றனர்.*

*பள்ளர்கள் தாங்கள் மட்டுமே மருத நிலத்தை ஆண்ட வேளாண் குடிமக்களான மள்ளர்கள் என்றும், மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மள்ளர்களே என்றும் கூறிக் கொள்கின்றனர். எந்த அடிப்படையும் ஆதாரமுமற்ற இத்தகு கட்டுக் கதைகள், இச்சாதிய சமூகத்தில் ஆற்றவிருக்கும் பங்கு, நிலைத்து நின்றுவிட்ட இந்துமத சூழ்ச்சிகளுக்கும் நீடித்து வரும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் துரும்பளவு கூட எதிர்வினையாற்றப் போவதில்லை. மாறாக, இச்சாதியக் கட்டமைப்பின் கெட்டித் தன்மைக்கு மேலும் வலுவேற்றும் வேலையையே அது ஆற்றும்.*

*உலகம் முழுவதிலும் குறிப்பாக இந்தியாவில் மொழி மற்றும் பண்பாட்டுப் பாகுபாடின்றி, இம்மண்ணின் தொல்குடிகள் அனைவருக்குமே செருக்கோடு பகிர்ந்து கொள்ளக் கூடிய வரலாறு நிச்சயம் உண்டு. அதைப் போலத்தான் வேளாண் தொழில் செய்து வந்த பள்ளர்கள் குறித்த குறிப்புகள், மள்ளர்கள் என்ற பெயரில் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. உணவு உற்பத்தி எக்காலத்திலும் முதன்மைத் தொழிலாக இருக்கும்போது, நதிக்கரையோர நிலங்களை வைத்துக் கொண்டு விவசாயம் செய்தவர்களே முதன்மை பெற்ற சமூகமாக இருந்ததில் வியப்பேதுமில்லை. இது, அவர்களின் புவியியல் சார்ந்த வாழ்வியல். இதே போன்ற புவியியல் சார்ந்த வாழ்வியல் ஒவ்வொரு நில மக்களுக்கும் இருந்தது.*

**தன் நிலை உணர்ந்து சுய மரியாதையையும் உரிமைகளையும் பெறப் போராடுவது என்பது வேறு; ஆதிக்கசாதிகளுக்கு இணையாக தன்னையும் ஆதிக்கவாதியாக ஆக்கிக் கொள்வது என்பது வேறு! இந்த வேறுபாட்டை நிச்சயம் ஒடுக்கப்பட்ட மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப்புரிதல் உண்டாவதற்கு, ஒடுக்கப்பட்ட ஒருவர், தான் ஒடுக்கப்பட்டுத்தான் இருக்கிறோம் என்பதை முதலில் உணர வேண்டும்.**

இதில் எதுவொன்றையும் உயர்வானதாகவோ, மற்றொன்றை தாழ்வானதாகவோ கருத நியாயமில்லை. வேளாண் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களைத் தவிர, பிற தொழில் செய்கிற மக்களும் அக்காலத்தில் வாழ்ந்தனர். அவர்களின் உழைப்பை அக்கால மள்ளர்கள் பெறவே செய்தனர். எத்தொழில் செய்த மக்களும் சுயமரியாதையோடும் சம தகுதியோடுமே வாழ்ந்திருக்கிறார்கள். இந்நிலையில், வேளாண் தொழில் மட்டுமே புனிதமானது என்ற கருத்தியலை பள்ளர்களும் முன் வைக்கக் காரணம், பிற தலித் பிரிவினரைப் போல மலமள்ளுவது, பறையடிப்பது போன்ற இழிதொழில்களைத் தாங்கள் செய்யவில்லை என நிறுவுவதற்காகவே!

இம்மண்ணில் ஜாதி வேரூன்றி, இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. பிரம்மனின் உடலில் எங்கெங்கிருந்து யார் யார் தோன்றினார்கள் என்ற வர்ணாசிரம வரையறையும் அதற்கு முன்பே தோன்றிவிட்டது. இந்து மதக் கட்டமைப்பின் ஆதிக்க வரலாற்றைப் புறந்தள்ளாமல், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மள்ளர்களே எனக் குறிப்பிடுகின்றனர் பள்ளர்கள். வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்படாத விஷயங்களை, தங்களின் வசதிக்கேற்ப வளைத்துக் கொள்வது ஆதிக்கவாதிகளின் செயல். பள்ளர்களும் ஏன் அம்முயற்சியில் ஈடுபடுகிறார்களெனில், தங்களின் அடிமை அடையாளத்தை மட்டும் எப்படியேனும் அறுத்தெறிந்துவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் குறிக்கோள். அதனாலேயே ஆண்ட பரம்பரை என்றும், சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் குலம் என்றும், போர்வீரர்களாகவும், விவசாயிகளாகவும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.

ஜாதி உருவாகி இரண்டாயிரம் ஆண்டுகளாகிவிட்டன. ராஜராஜசோழனின் ஆயிரமாண்டு சதய விழா கடந்த ஆண்டு கொண்டாடப்பட்டது. இம்மன்னர்களும் அவர்கள் ஆட்சியின் கீழிருந்த மக்களும் மட்டும் எப்படி சாதி என்ற கட்டமைப்பிற்கு வெளியே இயங்கியிருக்க முடியும்? நாடுகளை வளைத்துப் பேரரசரான பின்னரும் கூட சிவாஜியால், தன் விருப்பப்படி சத்ரியனாக முடியவில்லை. ஒரு சூத்திரர் சத்திரியராக முடியாதபோது, பஞ்சமர்கள் மட்டும் சத்திரியர்களாகி ஆட்சி செய்வதற்கான சாத்தியங்கள் ஏது? இந்த நாகரிக காலத்திலும் நவீனங்களை உள்விழுங்கிக் கொண்டு, ஜாதி வளர்வதால்தான் இன்று வரையிலும் கூட, எம்மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பிலும் தலித் மக்களால் அமர முடியவில்லை. சுதந்திர இந்தியாவில் வெகு சில விதிவிலக்குகள் உண்டு.

அரசமைப்புச் சட்டம் தீண்டத்தகாத மக்களுக்கு வைத்திருக்கும் வரையறைக்குள் தாங்கள் வரவில்லை என பள்ளர்களுக்கான சில தலைவர்களும் அமைப்புகளும் வாதிடுகின்றனர். தென்மாவட்டங்களில் உள்ள ஜாதிய பாகுபாடுகளும் தீண்டாமை வடிவங்களும் வெறும் பொய்களால் மறைக்கப்படக்கூடியவை அல்ல. அப்பகுதியில் அதிக எண்ணிக்கையில் தலித்துகளாக இருக்கும் பள்ளர்கள், தொடர்ச்சியான வன்கொடுமைகளுக்கும் தீண்டாமைக்கும் இழிவுகளுக்கும் ஆளாகியே வருகின்றனர் என்பது கண்கூடு.

இரட்டை டம்ளர் முறை, ஊர் தெருக்களுக்குள் அனுமதி மறுப்பு, கோயில்களுக்குள் செல்லத் தடை, அரச வன்முறை என தீண்டாமைக் கொடுமைகள் எப்போதும் உச்ச நிலையிலேயே இருக்கின்றன. பள்ளர்களையும் சாதி இந்துக்களையும் உள்ளடக்கிய எந்த ஊரையும் இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல முடியும். சேரியில் நாங்கள் வாழவில்லை என்றும், தீண்டாமை என்ற ஒன்றே தங்களுக்குக் கிடையாது என்றும் உண்மைகளை மறைத்துவிட்டுப் பேசுபவர்கள், உத்தப்புரத்தில் ஊரை இரண்டாகப் பிரித்து எழுப்பப்பட்ட சுவருக்கு அர்த்தமென்ன என்பதை விளக்க வேண்டும். அம்மக்கள் காலங்காலமாக அனுபவித்து வரும் கொடிய பாகுபாடுகள் அவர்களுடைய போர்க்குணத்தினால் உண்டான விளைவல்ல; அவர்கள் சார்ந்த சாதிக்காக விதைக்கப்பட்ட அநீதி.

அண்மையில், ஊர் கோயிலுக்குள் நுழைந்த பள்ளர்களுக்கு கிடைத்த சமநீதியை பொறுக்கமாட்டாமல் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, கதறியழுத உத்தப்புர சாதி இந்துக்களிடம் நாம் கண்ட வெறுப்புணர்வு வெறுமனே போட்டியாளர்கள் என்பதால் வந்ததல்ல. மள்ளர்களாக தங்களை முன்னிறுத்துகிறவர்கள் முக்குலத்தோருக்கும் தங்களுக்குமான வெறுப்புணர்வை சமமானவர்களுக்கிடையிலான சண்டை என்பதாகக் குறைத்துக் காட்ட முனைகிறார்கள். பொது மக்களை விடுங்கள், அண்மையில், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த உயர் நீதிமன்ற நீதிபதி கர்ணன், பிற சமூக நீதிபதிகளால் தான் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாவதாகக் குறிப்பிட்டாரே அதையும் மறுதலிப்பார்களா? தங்கள் மீதான தீண்டாமையை மக்கள் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு, அதற்கெதிராகப் போராடவும் உயிரை விடவும் கூட தயாராக இருக்கும்போது, அதை மூடி மறைக்க இவர்கள் யார்?

'ஆண்ட பரம்பரை' என்ற சொற்களின் மூலம் கிளர்ச்சியூட்டுவது ஒன்றையே மள்ளர் அமைப்புகள் தங்களின் அரசியல் பாதையாக வைத்திருக்கின்றன. "அடிமையிடம் நீ அடிமை எனச் சொல், அவன் கிளர்ந்தெழுவான்" என்றார் அம்பேத்கர். தாங்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை உணராமல், எல்லாம் விதி என வாழ்கிறவர்களிடம் ஆண்ட பரம்பரை என சொன்னால், எப்படியொரு கண்மூடித்தனமான கிளர்ச்சி உண்டாகுமோ, அதுதான் பள்ளர்களை எப்பொழுதும் ஆட்டுவிக்கிறது. தன் மீது சுமத்தப்பட்ட அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடாமல், சாதியக் கட்டமைப்பின் வன்முறைக்கு பதில் சொல்லாமல், தங்களது ஆதிக்கத்தை நிறுவுவதற்கான வாய்ப்புகளைத் தேடுகின்றனர். அடித்தால் திருப்பி அடிக்க வேண்டும் என சொல்லித் தரும் தலைவர்களின் வழி நடத்தலில், நாம் அடிமைகள் அல்லர், ஆதிக்கவாதிகள் என முறுக்கிக் கொண்டு எழுகிறார்கள். ஆண்ட பரம்பரை என்ற வாதத்திற்கு வலு சேர்க்கவே மள்ளரியத்தை துணைக்கழைக்கின்றனர்.

மன்னராட்சியின் சர்வாதிகாரங்கள் நிராகரிக்கப்படும் மக்களாட்சிக் காலத்தில், அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராட வேண்டிய மக்களுக்கு சர்வாதிகார உணர்வை ஊட்ட சில அமைப்புகள் தொடர்ந்து முயல்கின்றன. மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு

**சாதி ஆதிக்கத்தைத்தங்கள் செருக்கெனக் கொண்டாடும் முக்குலத்தோருக்கு இணையாக தேவேந்திரர் குலமென தங்களைச் சொல்கிறவர்கள், பறையர்களையும் சக்கிலியரையும் இணையற்றவர்களாகக் கருதுகின்றனர். ஒருவரோடு ஒருவர் கைகோக்க விரும்பாத இவர்கள், தாங்கள் ஒன்றிணைய வேண்டியதன் கட்டாயத்தை உணராமல்-பகைமையையும் வெறுப்புணர்வையும் ஆழப்படுத்தி, தங்களை தனிமைப்படுத்திக்கொள்ளத் துடிக்கின்றனர்.**

அடிவருடிகளாக இருந்து, ஜாதியை காப்பாற்ற எடுத்த முயற்சிகளை சமூக வரலாறுகளும் ஆய்வுகளும் வலுவாக முன் வைக்கின்றன. பல தார மோகம், பெண்களை பாலியல் தொழிலில் தள்ளியது, சிரச் சேதம் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களை அரங்கேற்றியது என ராஜ ராஜ சோழன் உள்ளிட்ட மன்னர்களின் சர்வாதிகார அத்துமீறல்கள் நாமறிந்ததே! மன்னர்களின் உண்மை வரலாறு, மனித உரிமை மீறல்களின் ஒட்டுமொத்தப் பதிவாகவே இருக்கிறது எனும்போது, மள்ளர் அமைப்புகள் எப்படி அவர்களோடு தம்மை தொடர்புபடுத்தி பெருமை பாராட்டுகின்றன?!

மள்ளர் அமைப்புகள் சில, தங்களின் பண்டைய செல்வாக்கையும் பெயரளவிலான ராஜ குலப் பின்னணியையும் துருப்பாக வைத்துக் கொண்டு, இச்சாதிய சமூகத்திடம் முன் வைக்கும் கோரிக்கைகள் சுயநலமிக்கவை. "அரசமைப்புச் சட்டம் வரையறுக்கும் தீண்டத்தகாத மக்களுக்கான வரையறைக்குள் தாங்கள் இல்லை; அதனால் பட்டியல் சாதியிலிருந்து விடுவிக்க வேண்டும்" என்கிறார்கள். நல்லது. பட்டியல் சாதியிலிருந்து வெளியேற விழையும் பள்ளர்களின் இந்த விருப்பமானது, இந்து மதத்தின் சாதியக் கட்டமைப்பைத் தகர்க்கும் முயற்சியா என்றால், அதுதான் இல்லை. இந்து மதத்தை விட்டு வெளியேறும் முயற்சியா என்றால், அதுவும் இல்லை.

இந்தியாவில் சாதியை முற்றாக அழித்தொழிக்க விரும்புகிறவர்கள், அம்பேத்கர் முன்வைத்த மதமாற்றம் ஒன்றையே ஆயுதமாகக் கையிலெடுக்கின்றனர். இதற்கு மாறாக, இந்து மதத்தில் இருந்து வெளியேற விரும்பாத மள்ளர் அமைப்புகள், தங்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென வலியுறுத்துகின்றனர். இந்து மதத்தைத் துறந்து கிறித்துவம், இஸ்லாம் போன்ற மதங்களைத் தழுவினால் மிக எளிதாகவே

**பிற்படுத்தப்பட்டோர் தலித்துகளை ஒடுக்குவதும், தலித் மக்கள் அதற்கு எதிர்வினையாற்றுவதுமாக அல்லது தலித்துகளே தலித்துகளோடு மல்லுக்கட்டுவதுமாக – இந்தச்சண்டை கீழேயே நடந்து கொண்டிருக்க, இந்நாட்டின் வளங்கள், துறைகள், அதிகாரங்கள் என உயர்நிலையில் உள்ள எல்லாவற்றையும் ஒரு சிறு குழு அனுபவித்துக் கொண்டிருப்பது பற்றியோ, அதில் தங்களுக்கான நியாயமான பங்கைக் கோருகிறவர்களைத் திரண்டு வந்து, அக்குழு தாக்குவது குறித்தோ நமக்கு**

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைந்துவிடமுடியும். ஆனால், இதைச் செய்ய மறுத்து, 'இந்து பிற்படுத்தப்பட்டோர்' பட்டியலில் சூத்திரர்களாக இடம் பிடிக்கவே துடிக்கின்றனர்!

பட்டியல் சாதிப் பிரிவில் இருப்பதால், சாதி இழிவு யாரையும் ஆட்கொள்ளவில்லை. பிறப்பால் சாதி இழிவுக் கரையை சுமந்து கொண்டிருந்ததாலேயே எல்லோரைப் போலவே பட்டியல் சாதிப் பிரிவில் பள்ளர்கள் வர நேர்ந்தது. பட்டியலில் இருப்பதுதான் பிரச்சனை என்றால், 78 சாதிகளும் கூட வெளியேறி விடலாமே! தன் ஆயுட்காலத்தை முழுவதுமாக அர்ப்பணித்து அம்பேத்கர் அவர்கள் எழுதிய சமூக வரலாற்றையும், அரசமைப்புச் சட்டத்தையும் இடது கையால் நிராகரிக்கிறவர்களில் பெரும்பாலானோர், இட ஒதுக்கீட்டின் பயனை அனுபவித்து வளர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்! கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுவிட்ட பின்னர், இன்று சாதிச் சான்றிதழ்களில் எஸ்.சி.யை, பி.சி.யாக்கப் போராடுகின்றனர்.

இன்றளவும் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகி, சமூக நீதி என்பது முற்றிலுமாக மறுக்கப்பட்டு அடிப்படைக் கல்வி கூட கிட்டாதவர்களைப் பற்றி இவர்களுக்கு துளியும் அக்கறையில்லை. ஆறு பேர் படுகொலை செய்யப்பட்ட பரமக்குடியில் கூட, பெரும்பான்மை பள்ளர்கள் விவசாயக் கூலிகளாகவே வேலை செய்கின்றனர். அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தைப் பிடுங்கியெறிய இவர்களுக்கென்ன உரிமை இருக்கிறது? சாதிச் சான்றிதழ் என ஒன்று (ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் எந்த சான்றிதழ் இருந்தது? எந்தப் பட்டியல் இருந்தது?) இருப்பதன் பயன் தெரியாமலேயே எத்தனை மக்கள் தங்கள் வாழ்நாட்களை கடந்து போகிறார்கள்? இவர்களுக்கு தெரிந்ததெல்லாம் சாதியின் பெயரால் நிகழும் ஒடுக்குமுறைகளும் அத்துமீறல்களும் சுரண்டல்களும் மட்டுமே! எஸ்.சி. பி.சி.யானால் என்ன நடந்துவிடும் என்பதைக் கூட அவர்கள் அறிந்திருக்கப் போவதில்லை.

பள்ளர்களை தலித் என்றோ, ஆதி திராவிடர் என்றோ அழைக்கக் கூடாதென தொடர்ச்சியாக மள்ளர் அமைப்புகள் மிரட்டல் விடுக்கின்றன. மண்ணின் மக்கள் என்ற அர்த்தத்தை உள்ளடக்கிய தலித் என்ற சொல்லின் மீது, இவர்களுக்கு அப்படியென்ன வெறுப்பு? ஊடகங்களிலும் உலகளவிலும் தலித் என்பது, சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டோர் தங்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதன் குறியீடாக மாறியிருக்கின்ற நிலையில், பள்ளர்கள் மட்டும் அதிலிருந்து தங்களை துண்டித்துக் கொள்ள நினைப்பதன் நோக்கம் என்ன? உண்மையில் இவர்கள் பிற பட்டியல் சாதியினரை விட தங்களை உயர்ந்தவர்களாகக் கருதுவதால், அவர்களோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

தங்கள் மீது இழிவைத் திணிக்கும் சாதி இந்துக்களை எதிர்க்கும் அதே வேளையில், பறையரையும் சக்கிலியரையும் கீழானவர்களாகக் கருதும் மனநிலைதான் பள்ளர்களிடம் ஓங்கி நிற்கிறது. சாதி இந்துக்களைப் போலவே எல்லாவிதமான தீண்டாமையையும் பறையர் மற்றும் சக்கிலியர் மீது பள்ளர்கள் செலுத்துகின்றனர். பிற்படுத்தப்பட்டோராகி விட்டால், சாதி இந்துக்களோடு சமத்துவம் கிடைப்பது ஒரு பலனெனில், தலித்துகளை இன்னும் வீரியத்தோடு ஒடுக்க முடியும் என்பது மற்றொரு பலன்.

மள்ளர் மள்ளர் அல்லாதோர் என்று சமூகத்தை செங்குத்தாகப் பிரித்துப் பார்க்கவே மள்ளர் அமைப்புகள் தீவிரம் காட்டுகின்றன. நாம்தான் ஆண்ட பரம்பரை, நாம்தான் வேளாண் குடி, நாம்தான் மன்னர்கள், நாம்தான் தமிழர்கள் என்ற முழக்கத்தின் மூலம் மற்றவர்களை வந்தேறிகளாகவும், அடிமைச் சமூகமாகவும் சித்தரிக்க முயல்கின்றன. பார்ப்பனியத்தைப் போலவே இது ஒட்டுமொத்தமான ஆதிக்க உளவியலன்றி வேறென்ன?

எதற்கும் கட்டுப்படாதவர்களாகவும், பெருந்துணிச்சல்காரர்களாகவும் சாதியக் கட்டமைப்பை மிஞ்சியவர்களாகவும் தங்களை முன்னிறுத்திக் கொள்கிறவர்களால், தம்மை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்திய இந்து

மதத்தையும், அது உருவாக்கிய சாதியையும் ஒருபோதும் துறக்க முடிவதில்லை. பள்ளர்கள் சாதி வேண்டாமெனச் சொல்லவில்லை; அடிமைச் சாதி வேண்டாம் என்கிறார்கள். சிவன், இந்திரன், விஷ்ணு ஆகியோரை முன்னோர்களாக வணங்குகின்றனர். சிவனுக்கு கோயிலை கட்டியதாலேயே ராஜராஜ சோழனை மள்ளர் எனக் கொண்டாடுகின்றனர். வேந்தன் என்பது இந்திரனையும் மன்னனையும் குறிக்கிறது என்பதால், தேவேந்திர குலம் என தங்களை அடையாளப்படுத்தவும் துணிகின்றனர். ஆனால், இவையெல்லாம் ஒருபோதும் அவர்களின் பிறப்பின் அடிப்படையிலான சாதி இழிவைப் போக்கப் போவதில்லை.

தென் மாவட்டங்களில் குறிப்பாக ராமநாதபுரத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சாதிய அத்துமீறல்களுக்கும், அரச பயங்கரவாதத்திற்கும் கடந்த அய்ந்தாண்டுகளில் பள்ளர்கள் எதிர்கொண்ட உயிர், உடைமை, உரிமை இழப்புகளைத் தடுக்கவோ அதற்கு ஈடு செய்யவோ ஆளில்லை. ஆறு பேரை பலிகொண்ட அரச பயங்கரவாதத்திற்கு கூட, பாதிக்கப்பட்டவர்களுக்காக சட்ட ரீதியான, தார்மீக ரீதியான உதவிகளை செய்ய முன் வராமல், செய்கிறவர்களையும் விரட்டியடிக்கும் செயலில் ஈடுபடுகின்றனர். 'பெயருக்கு' அரசியல் செய்வோர், சாதிவெறியின் அன்றாட அழுத்தங்களால் கொதி நிலையில் இருக்கும் மக்களின் உணர்வுகள் போர்க் குணமென்ற பெயரில் களத்தில் உயிர்பலி கொடுக்கவே பயன்படுகிறது. மாறாக, அவர்களை நெறிப்படுத்தவோ, வாழ்வியல் தரத்தை உயர்த்தவோ, பகுத்தறிவூட்டவோ, ஏன் அரசியல்படுத்தவோ கூட முன்வரவில்லை.

தலித் மக்கள் யாராக இருந்தனர் என்பது முக்கியமில்லை; யாராக இருக்கிறார்கள் என்பதும், யாராக இருக்கப் போகிறார்கள் என்பதுவுமே முக்கியம். பாட்டனுக்கு பாட்டன் மன்னனாகக் கூட இருந்திருக்கலாம். ஆனால், இடையில் பின்னப்பட்ட சூழ்ச்சியில் தலைமுறைகள் அடிமைகளாகிவிட்டன. அடிமைத்தனத்தின் வலி என்னவென இப்போது நன்றாகத் தெரியும். ஆதிக்கத்தை பிறப்புரிமையாகக் கருதி அதைக் கோருவதா? இல்லை, அடிமைத்தனத்தை பிறவி இழிவாகக் கருதி, அதை எதிர்த்து சமத்துவத்திற்காகப் போராடுவதா? புத்தரும் அம்பேத்கரும் பெரியாரும் இரண்டாம் கேள்வியோடு நின்றார்கள். இன்றைய தலித் அமைப்புகள் முதல் கேள்வியோடு நிற்கின்றன.

பிரித்தாளும் பார்ப்பனிய சூழ்ச்சி, மக்களை சாதிகளாகத் துண்டாடியது. மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும் பல்வேறு சாதிகளாக சமூகங்கள் சிதறுண்டு கிடக்கின்றன. எட்ட முடியாத உயரத்தில் அமர்ந்து கொண்ட பார்ப்பனர்கள், சாதிய அடுக்கை நுணுக்கமாகக் கட்டமைத்ததில் நமக்கு கீழ் நான்கு பேர் இருப்பதில் மகிழ்ச்சியடைந்து கொண்டோம். தலைக்கு மேலே எத்தனை பேர் இருந்தாலும் சரி, காலுக்குக் கீழே யாராவது இருந்தாக வேண்டும். சாதியச் சுழலுக்குள் சிக்கி உழலும் ஒவ்வொரு இந்தியனின் / இந்துவின் உளவியலும் இப்படித்தான் இருக்கிறது.

பிற்படுத்தப்பட்டோர் தலித்துகளை ஒடுக்குவதும், தலித் மக்கள் அதற்கு எதிர்வினையாற்றுவதுமாக அல்லது தலித்துகளே தலித்துகளோடு மல்லுக்கட்டுவதுமாக இந்த சண்டை கீழேயே நடந்து கொண்டிருக்க, இந்நாட்டின் வளங்கள், துறைகள், அதிகாரங்கள் என உயர்நிலையில் உள்ள எல்லாவற்றையும் ஒரு சிறு குழு அனுபவித்துக் கொண்டிருப்பது பற்றியோ, அதில் தங்களுக்கான நியாயமான பங்கை கோருகிறவர்களை திரண்டு வந்து, அக்குழு தாக்குவது குறித்தோ நமக்கு அக்கறையில்லை. உண்மையான வந்தேறிகளும் கொள்ளைக்காரர்களுமான அவர்களை சுதந்திரமாக உலவவிட்டு, நசுங்கி ஒடுங்கிக் கிடப்பவர்கள் தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பிரித்தாள்வது பார்ப்பனியத்தின் சூத்திரமெனில், அதற்கெதிராக ஒன்றிணைவது ஒன்றே ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கான திறவுகோலாக அமைய முடியும். அம்பேத்கரும் பெரியாரும் இதையே வலியுறுத்தினர். தலித் மக்களை திரட்டும் தலைமைகள் ஆதாரமற்ற வரலாற்றுக் கதைகளைச் சொல்லி, தன் மக்களை மேலும் தனிமைப்படுத்தும் செயலையே செய்கின்றனர். பள்ளர்களிடம் மட்டுமல்ல; பறையர், சக்கிலியர், புதிரை வண்ணார் என எல்லோரையுமே இந்நோய் பீடித்திருக்கிறது. இந்து மத சூழ்ச்சியை தகர்த்தெறியவும் சாதியக் கட்டமைப்பை உடைக்கவும் இவர்களிடம் எந்த செயல் திட்டங்களும் இல்லை. மாறாக, ஆளாளுக்கு ஒரு சாதிய அடையாளத்தை உருவாக்கி, அதை வைத்து அரசியல் செய்யவே முனைகின்றனர்.

இந்தியா முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் மொழியும் பண்பாடுகளும் வெவ்வேறானதாக இருந்தாலும், அவர்களின்

வலியும் வேதனையும் கொண்டாட்டங்களும் இழப்புகளும் ஒன்றுதான். அதை உணரும் சுரணையற்றதாக ஒடுக்கப்பட்ட சமூகம் சுணங்கிக் கிடக்கிறது. வடகோடியில் வாழும் தலித்தும் தென் எல்லையில் வாழும் தலித்தும் சம அளவிலான சவால்களையே சாதி ரீதியாக எதிர்கொள்கின்றனர். எனும்போது, அவர்கள் கருத்தியல் ஓர்மையுடன் இணைவதைத் தவிர, சாதியொழிப்பு வேறெப்படி சாத்தியப்பட முடியும்?

ஆனால், சாதி ரீதியான அடக்குமுறையில் துவளும் தலித்துகளுக்கு ஆதிக்க வெறியை ஊட்டும் வேலைகள்தான் பெரும்பாலும் இங்கே நடந்து கொண்டிருக்கின்றன. தன்னிலை உணர்ந்து சுய மரியாதையையும் உரிமைகளையும் பெறப் போராடுவது என்பது வேறு; ஆதிக்கசாதிகளுக்கு இணையாக தன்னையும் ஆதிக்கவாதியாக ஆக்கிக் கொள்வது என்பது வேறு! இந்த வேறுபாட்டை நிச்சயம் ஒடுக்கப்பட்ட மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த புரிதல் உண்டாவதற்கு, ஒடுக்கப்பட்ட ஒருவர், தான் ஒடுக்கப்பட்டுதான் இருக்கிறோம் என்பதை முதலில் உணர வேண்டும்.

உட் சாதி என்பது, பார்ப்பனியத்தின் உயர் சதி. இந்த உண்மை புரியாமல், ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு இடையிலான மோதலானது, எதிரி யார் என்ற தெளிவில்லாமலேயே நடந்து கொண்டிருக்கிறது. எதிரியை இணங்காணாத இந்த சண்டை, காற்றுடன் மல்லுக்கட்டுவதற்கு சமம். சாதி ஆதிக்கத்தை தங்கள் செருக்கெனக் கொண்டாடும் முக்குலத்தோருக்கு இணையாக தேவேந்திரர் குலமென தங்களைச் சொல்கிறவர்கள், பறையர்களையும் சக்கிலியரையும் இணையற்றவர்களாகக் கருதுகின்றனர். ஒருவரோடு ஒருவர் கைகோக்க விரும்பாத இவர்கள், தாங்கள் ஒன்றிணைய வேண்டியதன் கட்டாயத்தை உணராமல் பகைமையையும் வெறுப்புணர்வையும் ஆழப்படுத்தி, தங்களை தனிமைப்படுத்திக்கொள்ளத் துடிக்கின்றனர்.


தன்னை அடித்தவர்களை அடிக்க கரங்களை வலுவேற்றுவது, வெட்டியவர்களை வெட்ட ஆயுதங்களை கூர் தீட்டுவது என நபர்களுக்கும் நிகழ்வுகளுக்கும் மட்டுமே பதில் சொல்லத் துடிப்பவர்கள், படிநிலைப்படுத்தப்பட்ட இந்த சாதிய கட்டமைப்புதான் தங்களை இந்நிலைக்கு ஆளாக்கியது என்பதை புரிந்து கொள்ளவோ, ஏற்கவோ மறுப்பது வேதனைக்குரியது. அதனாலேயே இக்கட்டமைப்பைத் தகர்த்தெறிய முனையாமல், அதை திருத்தியமைக்க வேண்டுமென கோருகின்றனர். ஆனால், உண்மை என்னவெனில், சாதியப் படிநிலைகளை ஒரு போதும் மாற்றியமைக்க முடியாது. தன் மீது திணிக்கப்பட்ட இழிவை துடைத்தெறிய வேண்டுமெனில், சாதியை தகர்ப்பதைத் தவிர, ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு வேறு மாற்றோ, தேர்வோ இல்லை. ஆகப் பெருஞ்செயலான அது, ஒடுக்கப்பட்ட சமூகங்கள் ஒன்றிணையும் போது மட்டுமே நடக்கும். அதனால், 'உங்களை எல்லாம் விட உயர்ந்தோர் நாங்கள்' என்ற முழக்கத்தை மாற்றி, நாமெல்லோரும் சமம் என சொல்லத் தொடங்குங்கள். சாதிக்கான சண்டையை சாதிக்கு எதிரான சண்டையாக மாற்றுங்கள். அப்போது உண்டாகும் திரட்சி, சாதியத்திற்கெதிரான பெரும் புரட்சியாக நிச்சயம் மாறும்.

நன்றி - தலித்முரசு அக்டோபர் 2011



''மது அருந்துபவர்கள் எல்லோரும் யோக்கிய பொறுப்பற்றவர்கள் என்றும் மது அருந்தாதவர்கள் எல்லோரும் யோக்கிய பொறுப்புடையவர்கள் என்றும் கருதிவிடக்கூடாது. மனிதத் தன்மைக்கு மது அருந்துவது இழுக்கு என்று கருதக் கூடாது.... குடிப்பழக்கமில்லாதவர்களில் எத்தனை யோக்கிய மற்றவர்கள், கை சுத்தமற்றவர்கள், சமுதாயத்திற்குக் கேடானவர்கள் இருக் கிறார்கள். இவர்களைவிட மது அருந்துபவர்கள் கேடர்கள் அல்ல. மது அருந்துவது சட்டவிரோதம் என்று சொல்லலாம். லஞ்சம் வாங்குவது கூட சட்டவிரோதம் தான். லஞ்சம் வாங்கப்பட்டவர்கள் எல்லாம் சமுதாயத்தில் தள்ளப்பட்டவர்களா? தண்டிக்கப் பட்டவர்களா?

(விடுதலை 16.2.69)''




# மதுவிலக்கு ஓட்டுக்காக! VSOP துட்டுக்காக!

‘வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க’ VSOP என்ற திரைப்பட விமர்சனம் 16.08.15 தமிழ் இந்து நாளிதழில் வெளியாகி உள்ளது.

“ஒரு பெண்ணைக் கவர்வது எப்படி என்பதுதான் பெரும்பாலான படங்களின் தலையாய பிரச்சினை. அதை வைத்துத்தான் ராஜேஷ் படத்தை ஓட்டுகிறார். ஆனால் அதற்கான காட்சிகளில் துளியாவது புதுமை இருக்க வேண்டாமா? நட்பால் காதலுக்கும் குடும்ப வாழ்வுக்கும் வரும் பிரச்சினையைச் சொல்லும் காட்சிகளும் மனதைக் கவரும் வகையில் இல்லை. போதாக்குறைக்கு ஆபாச இரட்டை அர்த்த வசனங்களும் நகைச்சுவை போர்வை போர்த்திக்கொண்டு ஆங்காங்கே எட்டிப் பார்க்கின்றன. குண்டாக இருக்கும் பெண்களைக் கேவலப்படுத்துகிறார்கள்”

இவ்வாறு தி-இந்து குமுறித்தள்ளியிருக்கிறது. ஆகா! என்ன ஒரு சமுதாய அக்கறை! என்று பாராட்டத்தான் தோன்றியது. அடுத்தவரிகளைப் பார்த்தவுடன் தான் இந்துவின் பூணூல் பாசம் தெரிந்தது. அந்த வரிகள்...

“அப்பாவிக் குடும்பத்தைக் கேவலப் படுத்துகிறார். அப்படிக் கேவலப்படும் குடும்பத்தின் ஜாதி அடையாளத்தையும் வெளிப்படையாகவே காட்டுகிறார்”

அப்படிக் கேவலப்படும் அப்பாவிக் குடும்பத்தின் ஜாதி அடையாளம் என்ன தெரியுமா? பார்ப்பன அடையாளம். அக்ரஹார அடையாளம். காலங்காலமாக, நூற்றுக்கணக்கான திரைப்படங்களில் தாழ்த்தப் பட்டோரையும், பிற்படுத்தப்பட்டோரையும், கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் கேவலப்படுத்தும் காட்சிகள் அமைக்கப் பட்டிருந்தன. வில்லன்களாக, கவர்ச்சி நடிகைகளாக சிறுபான்மையோர் சிறுமைப் படுத்தப்பட்டனர். அப்போதெல்லாம் அவை ஜாதியை, ஒரு இனத்தை அடையாளப் படுத்துவதாக இந்துவுக்குத் தெரியவில்லை. அக்ரஹார மாமியை, அம்பியை, மாமாவை அடையாளப்படுத்தினால் உடனே பூணூலை உறுவிக்கொண்டு உறுமுகிறார்கள்.

பெரும்பாலான திரைப்படங்களை பெண்விடுதலைப் பார்வையில், அறிவியல் பார்வையில், சமத்துவப் பார்வையில், மனிதநேயப் பார்வையில் நாம் ஏற்றுக் கொள்ளவே முடியாதுதான். இந்த vsop யும் அந்த வரிசையில் ஒன்றுதான்.

ஆனால், மதுவிலக்கு அரசியல் சூடுபிடித்துள்ள இந்தச் சூழலில்,VSOP என்ற தலைப்பு - ‘பீர்’ பொங்குவதைப் பின்னணியாகக் கொண்டு டைட்டில் - “போரை நிறுத்தனும்னாலும் உண்ணாவிரதம், பாரை மூடணும்னாலும் உண்ணாவிரதம், இப்போதைக்கு இதுதான்டா ட்ரெண்ட்” என்பது போன்ற வசனங்கள் - “ஊரிலுள்ள பாரிலெல்லாம் சேர்ந்தே குடிச்சவங்க” என்ற பாடல் வரிகள் இவற்றைத் திரையில் காட்டிய துணிச்சலை - இலட்சக்கணக்கான தமிழர்கள் பார்த்து இரசித்துக்கொண்டிருக்கிறார்கள். ‘மது’வை குடித்தே ஒழிக்கும் அரசியல் வாதிகளையும், அவர்களது அரசியலையும் புரிந்துகொண்டும் இருக்கிறார்கள். ‘மதுவிலக்கு’ ஓட்டுக்காக! - vsop துட்டுக்காக!



தோழர் அம்பேத்கர்

# மதுவிலக்கு வைத்தியக்காரத்தனம்

மதுவிலக்குக் கொள்கையைப் பெரும் பைத்தியக்காரத்தனம் என்றுதான் சொல்லவேண்டும். அதை மேலும் விரிவுபடுத்து வதை நிறுத்துவதுடன், அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். எதை நிறுத்துவதற்காக அதைக் கொண்டு வந்தோமோ அதைவிட அதிகக்கேடுகள் விளைந்துள்ளன. சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாகிவிட்டது, முன்பெல்லாம் ஆண்கள்தான் சாராயம் குடித்துவந்தனர். இப்பொழுது பெண்களும் சிறுவர்களும் சாராயம் குடிக்கிறார்கள். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முன்னிலையில் தான் ஒவ்வொரு வீட்டிலும் சாராயம் காய்ச்சப் படுகிறது. குற்றங்கள் பெருகியதோடுஅல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களின் மிகப்பெரும் ஒழுக்கக்கேட்டிற்கும் வகை செய்துள்ளது.

நிதி ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டு மென்ற நோக்கில் பார்த்தால் இது பெரும் இழப்பு தான்.1945-46இல்'ஏ' பிரிவு மாகாணங்களில் ஆயத் தீர்வை மூலம் கிடைத்த வருவாய் ரூ.51.67கோடி 1950-51 ஆம் ஆண்டுகளில் இது 25.23 கோடி ரூபாயாக இருந்தது. 1951-52ல் பட்ஜெட் மதிப்பீடு 24.95 கோடி ரூபாயாக உள்ளது. 1945-46 ஆண்டுக்கான தொகையில் பிரிவினை செய்யப் படாத பஞ்சாப் மற்றும் வங்காளத்தின் தொகையும் அடங்கியுள்ளது. இருப்பினும், மது விலக்கினால் ‘ஏ’ பிரிவு மாகாணங்களின் இழப்பு ஆண்டிற்கு 25 கோடி ரூபாயாக உள்ளது எனக் கூறலாம். மதுவிலக்கு இல்லையென்ற நிலையில் ஆயத்தீர்வை அதிகரிக்கும் வாய்ப்பு இதில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

1946-47ஆம் ஆண்டுகளில் பம்பாயிலிருந்து ஆயத்தீர்வை மூலம் கிடைத்த வருமானம் 9.74 கோடியாக இருந்தது. 1950 - 51 ஆம் ஆண்டுகளில் அது1.20 கோடியாக இருந்தது. பட்ஜெட் மதிப் பீட்டின் படி 1951-52 களில் அது 1.05 கோடியாக உள்ளது. தீர்வை மூலம் கிடைக்கும் வருமானத்தின் இழப்பு ஆண்டிற்கு 8.7 கோடியாகிறது. 1945-46 ஆம் ஆண்டுகளில் ஆயத்தீர்வை மூலம் மெட்ராசுக்குக் கிடைத்த வருமானம் 16.80 கோடியாக இருந்தது. 1950 - 51 இல் அது 0.50 கோடியாகக் குறைந்தது. 1951 - 52 க்கான பட்ஜெட் மதிப்பீடு 0.36 கோடியாகும். மதுவிலக்கை அமலாக்கியதால் ஆயத் தீர்வை வருமானத்தில் ஏற்பட்ட இழப்பு 0.16 கோடியாகும்.

நடுநிலைமையிலிருந்து பார்த்தால் மதுவிலக்கை அமுல்படுத்துவதில் எந்த நியாயமும் கிடையாது. மதுவிலக்கை அமுல்படுத்தும் செலவு பொதுமக்கள் தலையில் கட்டப்படுகிறது. ஒருபோதும் திருத்தமுடியாத ஒன்றோ இரண்டோ இலட்சம் குடிகாரர்களைத் திருத்துவதற்காகப் பொதுமக்கள் ஏன் செலவைச் சுமக்க வேண்டும்? வீட்டுவசதி, சுகாதாரம் மற்றும் கல்வி போன்று பல துறைகளுக்கு நிதி ஆதாரம் தேவைப்படும்போது ஏன் பொது மக்கள் மதுவிலக்குச் செலவுகளை ஏற்கவேண்டும்? ஏன் அதை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது? யாருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், குடிகாரர்களுக்கா அல்லது பட்டினி கிடப்பவர்களுக்கா?

இந்த நியாயமான கேள்விகளுக்குப் பதில் கிடையாது, ஆணவமும் மூர்க்கத்தனமான பிடிவாதமும்தான் இதற்கெல்லாம் பதில். என்ன நேர்ந்தாலும் சரி, மதுவிலக்குக் கொள்கை திரும்பப் பெற வேண்டும். பொதுமக்கள் பணம் விரயமாவதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். இந்த நிதி ஆதாரங்கள் பொதுநல வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

*அம்பேத்கர் நூல்கள் - தொகுதி 35- பக்.511-12*

தகவல்: தமிழ் ஓவியா